# நாயகி நல்கிய நாமாவளிகள்

'ஸௌராஷ்ட்ர ஆழ்வார்'

ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகள்

அருளிச் செய்த

நாமாவளிகள் – கருத்துரையுடன்

(ஸௌராஷ்ட்ரம் – தமிழ்)

27/2



உரையாசிரியர்

"ஸ்ரீ நாயகி குருபாத தூளி"


(குட்டுவா) கே.ஆர். கிருஷ்ணமாச்சாரி B.A., R.B.V., S.B.K.,

ஈரோடு.

# நூல் விவரம்



| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | – | நாயகி நல்கிய நாமாவளிகள் |
| பொருள் | – | ஸ்ரீமந் நடன கோபால நாயகி சுவாமிகள் அருளிச் செய்த நாமாவளிகள் (65) கருத்துரையுடன் |
| ஆசிரியர் | – | கே.ஆர். கிருஷ்ணமாச்சாரி |
| பக்கங்கள் | – | 50 |
| பிரதிகள் | – | 1000 |
| ஆண்டு | – | 1997 |
| வெளியீட்டாளர் | – | கே.ஆர். ராமாச்சாரி<br>குருநடன கோபாலா பப்ளிஷர்ஸ்<br>60, இந்திரா நகர்,<br>மதுரை – 625 009. |
| நிதியுதவி | – | திருமலைதிருப்பதி தேவஸ்தானம் |
| அச்சகம் | – | பர்பக்ட் இம்ப்ரசன்ஸ்,<br>ஈரோடு –1. ✆ 259594 |
| விலை | – | ரூ. 10/– |

# பாத நமஸ்காரம்



திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரின்
ஆன்மீக நூல் வெளியிடும் நிதியுதவி
திட்டத்தின் கீழ் இந்நூல் வெளியிடப்பட்டது.

This book is published with the Financial assistance of Tirumalai Tirupati Devasthanams under their scheme aid to publish religious books



## ஸமர்ப்பணம்

அடியேனது திருத்தகப்பனாா,
அனவரதமும் ஸ்ரீ நாயகி சுவாமிகளின
கிருதிகளை பாடிய பாகவதோத்தமர்
'ஆாசசகா ரத்னம' 'அத்யயனம்'

ஸ்ரீ குட்டுவா.
ஹ. ராமலிங்காச்சாரியார்

நினைவாக இநநூல் ஸ்ரீ நாயகி சுவாமிகளின திருவடிகளில ஸமாபிககபபடுசிறது

## ஆசிரியர் உரை

*வட பாரதத்தில் மீராபாய், சைதன்ய மகாபிரபு, நாமதேவர் போன்றவர்கள், தென்னகத்தில் அன்னமய்யா, புரந்தரதாஸர், ஆழ்வார்கள் முதலியோரும் பகவானை உள்ளமுருகப்பாடியும், நல்லுபதேசம் செய்தும் கீர்த்தனைகள், நாமாவளிகள், பிரபந்தங்கள் ஆகிய சாகித்யங்களை நமக்கு வழங்கியுள்ளனர். அந்த மகத்தான பக்தி சாகித்யகர்த்தாக்கள் பரம்பரையில் தோன்றியவர் ஸௌராஷ்ட்ர ஆழ்வாராகவும் ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யராகவும் விளங்கும் ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகள் ஆவார்.*

*ஸ்ரீ நாயகி சுவாமிகள் அருளிச் செய்த சாகித்யங்களை பிரபந்தம், நாமாவளி, கீர்த்தனை, அகத்துறைப் பாடல்கள் என நான்கு வகையாக பிரிக்கலாம். இவற்றில் நாமாவளிகளில் சுவாமிகள் கூறும் கருத்தினை கூறுவதே இந்நூலாகும்.*

*இதனை தமது ஸௌராஷ்டிர மணி இதழில் தொடராக பிரசுரித்து ஆதரித்த பெருந்தகை ஸ்ரீ P.R.கோவிந்தசாமி அவர்களுக்கும் அணிந்துரை, வாழ்த்துரை, பாராட்டுரை, ஆசியுரை வழங்கியுள்ள சான்றோர்கள் அனைவருக்கும் அடியேனது நன்றி.*

*இந்நூலை உருவாக்கும் பணியில் என்னுடன் ஒத்துழைத்த எனது தர்மபத்தினி ஸ்ரீமதி துளசி பிருந்தா எனது புதல்வர்கள் லோகநாதன், வெங்கடேஷ் இருவருக்கும் நன்கொடை வழங்கிய திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாருக்கும் மேலும் நிதி வழங்கிய சேலம் செவ்வாய்ப்பேட்டை திரு.K.K.திருமால்ராவ், எனது தமயனார் புதல்வர்கள் திருவாளர்கள் K.R.M.பிரகாஷ்குமார், K R.M.நிரஞ்சன்குமார், ஈரோடு பர்பெக்ட் இம்ப்ரஷன்ஸ் உரிமையாளர் ஸ்ரீ M G வடிவேல் ஆகியோர்க்கும் எனது நன்றி.*

*நூலாசிரியர்*

ஓம்

ஸ்ரீ நடன கோபாலாய நம:

# கீதா நடனகோபால நாயகி மந்திர்

3, மாரியம்மன் தெப்பக்குளம்

மேல வீதி, மதுரை – 625 009.

தேதி : 21.6.1997

## அணிந்துரை

ஸௌராஷ்ட்ர ஜெகத்குருவும் ஆச்சாரியருமான 'மதுரையின் ஜோதி' ஸ்ரீ மந்நடன கோபால நாயகி சுவாமிகள் அருளிச் செய்த நாமாவளிகளை கருத்துரையுடன் இந்நூலை நூலாசிரியர் வெளியிடுகிறார். இது ஒரு புதிய முயற்சியாகும். இதன்மூலம் சுவாமிகளின் நாமாவளிப் பாடல்களை கருத்துரையுடன் படித்து அனைவரும் இன்புறலாம். திருமலை திருப்பதி தேவஸ்தான நிதி உதவியுடன் இந்நூலை வெளியிடுவது குறிப்பிடத்தக்கது. மேற்படி தேவஸ்தான நிர்வாகிகளை உளமாற பாராட்டுகிறோம். பக்த அன்பர்களின் ஆதரவு இந்நூலுக்கு நிச்சயம் உண்டு.

கடந்த இருபது ஆண்டுகாலமாக ஸ்ரீ நாயகி சுவாமிகள் ஸாஹித்ய பிரச்சார கைங்கர்யத்தில் ஈடுபட்டுள்ள நூலாசிரியரை பாராட்டி மகிழ்கிறோம்.

டி.கே. ஆத்மாராம்
தலைவர்

D.G. கிருஷ்ணன்
R.K. ராமகிருஷ்ணராவ்
காரியதரிசிகள்

வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழி வழி சிறந்து
பொலிமின்!

– தொல்காப்பியம்

டாக்டர் இரா. மோகன்
பேராசிரியர், ஒப்பிலக்கியத்துறை,
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

மதுரை – 21
10.8.97

## வாழ்த்துரை

'சௌராஷ்டிர ஆழ்வார்' என ஆன்மீக உலகால் மதிப்போடும் மரியாதையோடும் அழைக்கப்படுபவர் நடன கோபால நாயகி சுவாமிகள். 'நாயகி நல்கிய நாமாவளிகள்' என்னும் தலைப்பில் நாயகி சுவாமிகளின் நாமாவளிகளைக் கருத்துரையுடன் வெளியிடும் முயற்சியில் முதன்முறையாக ஆர்வத்துடனும் முனைப்புடனும் ஈடுபட்டுள்ளார் திரு. கே.ஆர். கிருஷ்ணமாச்சாரி, 'ஸ்ரீநாயகி குருபாத தூளி' என்று மிகுந்த அடக்கத்தோடு தம்மைக் குறித்துக் கொள்ளும் அவர், இந்நூல் உருவாக்கத்தில் காட்டியிருக்கும் அர்ப்பணிப்பு உணர்வு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

'சௌராஷ்டிர ஆசார்யர்' 'சௌராஷ்டிர கவி சிரேஷ்டர்' 'சௌராஷ்டிர சூத்ரதாரர்' 'சௌராஷ்டிர வல்லபாசார்யர்' 'சௌராஷ்டிர மஹாகவி' 'சௌராஷ்டிர குலமணி' என இந்நூலுள் ஆசிரியர் நாயகி சுவாமிகளுக்குச் சூட்டியிருக்கும் பொருத்தமான புகழாரங்கள் பலவாகும். மேலும் நாயகி சுவாமிகளின் நாமாவளிகளில் காணலாகும் பக்திச் சுவையினையும் அரிய கருத்துக்களையும் நூலாசிரியர் தம் கருத்துரையில் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

திரு. கே.ஆர். கிருஷ்ணமாச்சாரி இது போன்ற நிலைத்த பயன் [illegible] நூல் வெளியீட்டுப் பணிகளில் ஆர்வமும் ஈடுபாடும் காட்டி [illegible] போற்றி வரவேற்கத்தக்கதாகும். அவரது முயற்சிகள் யாவும் முழு [illegible] மனமார வாழ்த்துகிறேன்.

இரா. மோகன்

'நாயகிதாசன்'
புலவர் L.R. காசிராமன் B.A.

மதுரை
1.3.97

## பாராட்டுரை

ஆசிரியரின் கட்டுரைத் தொகுப்பினைப் படித்துப் பார்த்தேன். பரவசமானேன். அரிய முயற்சி அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் நாமாவளி விளக்கங்கள் உரையாசிரியரின் உழைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு

ஸ்ரீ நாயகி சுவாமிகளின் கீர்த்தனைகள் வேத ரூபம். அவரது நாமாவளிகள் உபநிஷத் வடிவம். நல்ல விளக்கம்.

ஸ்ரீ ரங்கநாதரை ஸ்ரீ நாயகி சுவாமிகள் அனுபவித்ததை உரையாசிரியர் நன்கு புரிந்து விளக்கியுள்ளார். 'ஹரி' என்ற சொல்லின் விளக்கம் ஆழமானது 'ஹரி' என்று சொன்ன மாத்திரத்தில் நம் குறை பகவான் அபகரித்துக் கொள்கிறார். புதுமையான விளக்கம்.

'கோன் கொங்குட் ஜியெத்காய்' இதற்கு விளக்கம் நன்கு தந்திருக்கிறார். உரையாசிரியர் சில இடங்களில் உரையாடல் வடிவில் விளக்கம் தருவது போற்றத்தக்கது.

'ஸெத்துலா திந்நாள்' அறிந்து கொண்ட விஷயம் வேடிக்கையானது ஆகும். விஷயம் நிறைந்தது பகவத் பக்தியோடு பாஷாபக்தியையும் எடுத்துக் கூறுகிறார்.

நகைச்சுவை நாமாவளிக்கும் (கோ தொளாம்பனி) நன்கு விளக்கம் கூறியுள்ளார்.

தமிழ் நாமாவளிகளையும் உரையாசிரியர் மறந்து விடவில்லை. விளக்கம் கூறியுள்ளார். 'அத்தொ–தொர்–நியாவ்' என்பது நீண்ட நாமாவளி என்று குறிப்பிட்டுள்ளார்.

நம் ஸமூகத்தில் நாயகி சுவாமிகள் பணியில் இருக்கும் மிகப்பெரிய படிப்புப் பெற்றவர்கள் செய்திருக்க வேண்டிய பணி இது. நான் நீண்டகாலமாக முயன்றும் செய்ய இயலவில்லை. எனவே இவரது முயற்சியை மனதாரப் பாராட்டுகிறேன்.

என் நீண்டகால கனவு நனவானது, பெருமகிழ்ச்சி.

*எல்.ஆர். காசிராமன்*

ஓம் ஸ்ரீ:

கே.ஆர். அனந்தாச்சாரி
தாசில்தார்

தாராபுரம் – 638 656
5–6–97

## ஆசியுரை

உலக ஆன்மீக ஸ்தாபனமான திருமலை திருப்பதி தேவஸ்தான நிதியுதவியுடன் இந்நூல் வெளிவருவதால் ஸ்ரீ நாய்கி சுவாமிகளின் சாகித்யங்களுக்கு உலக அங்கீகாரம் கிடைப்பதாகின்றது.

ஸ்ரீ நாயகி சுவாமிகளின் நாமாவளிகளை புரிந்து கொண்டு அனுஷ்டிப்பதற்கு இந்நூல் பெரிதும் உதவும்.

நூலாசிரியரின் இலக்கியத் தொண்டு வாழ்க! வளர்க!

கே.ஆர். அனந்தாச்சாரி

ஓம்


ஸித்த வித்யா விபூஷணம்
**M.V. சுப்புராமன்** M A, (ஹிந்தி)
M A (தத்துவம்) M Ed M Phil
ஹிந்திப் பேராசிரியர்

அமெரிக்கன் கல்லூரி
மதுரை -2
14 9 97


# அணிந்துரை

ஈரோடு திரு K R. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் இனிய தமிழில், எளிய முறையில் இந்நூலைப் படைத்துள்ளார் நாயகி பாவத்தில் கண்ணனைப்பாடிய ஸ்ரீமந் நடன கோபால நாயகி சுவாமிகள் பக்திப் பாவத்தில் பல நாமாவளிகளைப் பாடியுள்ளார். எல்லோரும் பொருள் தெரிந்து பாடி பக்திப் பரவசம் அடைய வேண்டும் என்று நூலாசிரியர் இந்நூலை வெளியிட்டுள்ளார். அவரது லட்சியம் நிறைவேறும் என்பது திண்ணம்.

"ஏலா தேலா கோபாலா" என்ற நாமாவளியில் உள்ள மனோதத்துவத்தை பக்திப் பின்னணியில் அவர் புனைந்துள்ள பொருள் மீண்டும் மீண்டும் அந்த நாமாவளியைப் பாடத்தூண்டும் என்பதில் ஐயமில்லை.

நாயகி ஸ்வாமிகள் பக்தர்களின் உள்ளத்தில் எத்தகைய ஆன்மீக உணர்வு பிறக்க வேண்டும் என்று எண்ணிப் பாடினாரோ அந்த உணர்வு இவருடைய கருத்துரையில் சற்றும் மாறுபடாது காட்டப்பட்டது இவரது நாயகி பக்திக்கு ஓர் உதாரணம் ஆகும்.

நாயகி சுவாமிகளின் நாமாவளிகள் கபீர்தாஸரின் அந்தரங்க பக்தியையும் சூர்தாஸரின் பகிரங்க பக்தியையும் துளசிதாஸரின் ஒருமைப்பாட்டு உணர்ச்சியையும் வெளிப்படுத்துவன ஆகும். இந்த உயர்ந்த கருத்துக்கள் சற்றும் சிதையாமல் ஆனால் படிப்போர் உள்ளத்தில் எளிதில் ஊடுருவிப் பாய்வது போல் திரு. கிருஷ்ணமாச்சாரியின் எழுத்தில் பரிணமிக்கின்றன என்று சொன்னால் மிகையாகாது.

அவர் ஏழுமலையான் கருணையால் இது போன்று இன்னும் பல நூல்களை இயற்றி பக்தி உலகத்திற்கு தொண்டு புரியவேண்டும் என்பது என் போன்ற நாயகி அடிப்பொடிகளின் அவா.

இந்த அரிய நூலை வெளியிட பொருளுதவி புரிந்த திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு ஆத்மார்த்தமாக நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

*எம்.வி. சுப்புராமன்*

# நாயகி நல்கிய நாமாவளிகள்

நாமாவளி எனும் ஸம்ஸ்க்ருத சொல்லுக்கு தமிழில் பெயர் தொகுப்பு அல்லது பெயர் வரிசை என்று பொருளாகும். அதாவது இங்கு பெயர் (நாமம்) என்பது இறைவனது திருப்பெயர் என்ற விசேஷ அர்த்தத்தைக் கொடுக்கின்றது. சுவாமிகளின் நாமாவளிப் பாடல்கள் இறைவனது திருப்பெயர்களை உச்சரிக்கும் பாங்கில் அமைந்துள்ளன. அறவுரைகளைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. இவரது சங்கீதப் பாடல்களை வேத ரூபமாக எடுத்துக் கொண்டால் நாமாவளிப் பாடல்களை உபநிஷத் வடிவமாகக் கொள்ளலாம். வேதங்களின் கருத்தை சுருக்கமாக கூறுவது உபநிஷதங்கள். அது போன்று சுவாமிகளின் சங்கீதப் பாடல்களில் உள்ள கருத்துக்களின் சுருக்கமே நாமாவளிப் பாடல்களாகக் கொள்ளலாம். ஸ்ரீ நாயகி ஸ்வாமிகள் மனதை நோக்கி கூறும் அறிவுரைகளாக பாடியுள்ள நாமாவளிப் பாடல்களை முதலில் பார்ப்போம்.

ஜல்லேரே ஜல்லேரே மொந்நு
கொா$^3$ல்லர் கீஷ்டுக் சொக்கட்
தெ$^4$ல்லேரே தெ$^4$ல்லேரே புந்நு.

ஏ மனமே ! நான் சொல்வதை அறிந்து கொள். இடையனாகிய கண்ணனை நன்கு பற்றிக் கொள். உனக்கு புண்ணியமாகும். இந்நாமாவளிப் பாடலின் பொருள் இதுவே. மனதை நோக்கி கூறுவதாக அமைந்துள்ள இப்பாடல் மூலம் தன்னை சுட்டுவதோடு நம்மையும் நோக்கி கூறுவதாக நாம் பொருள் கொள்ள வேண்டும். வெறும் 'கீஷ்டுக்' (கண்ணனை) என்று குறிப்பிடாமல் 'கொல்லர்' (இடையன்) என்று குறிப்பிடுவது ஏன் ?. எப்படி இடையன் பசுக்களை காத்து அவைகளை காப்பாற்றுவானோ அதே போன்று பகவான் கண்ணன் நம்மை காத்து காப்பாற்றுவான் என்பதை குறிப்பால் உணர்த்துவதற்காக இடையன் எனும் சொல்லை கையாண்டுள்ளார். இதை நீ அறிவாய் – அவனை பற்றிக் கொள். உனக்கு புண்ணியம் மிகச் சேருவதோடு நீ காப்பாற்றப்படுவாய் என்பதே சுவாமிகளின் கருத்தாகும்.

ப$^4$க$^3$வத் ப$^4$க்தி கார் மொந்நு
ப$^4$க$^3$வத் தாஸுந் ஸெர மீள் மொந்நா
ஜக$^3$துர் ஏ சொக்கட் கு$^3$ண்ணு
ஜந்ம வியாதி$^3$க் ஹொாக$^3$த்ரே மொந்நு

நான்கே வரிகளில் நாவினிக்க பாடுகின்றார். ஏ மனமே ! பாகவத பக்தி செய்வாய் என்று ஆணையிடுகின்றார். பாகவத சேவையில் ஈடுபட்டுள்ள பாகவதர்களோடு நீயும் சேர்ந்து கொள். இவ்வுலகில் இதுவே சிறந்த குணமாகும். ஏன் பகவான் சேவை செய்ப வேண்டும்?.

பாகவதர்களோடு ஏன் சேர்ந்து கொள்ள வேண்டும். இதனால் ஏதேனும் நன்மை உண்டா நமக்கு? 'பிறப்பு' எனும் வியாதிக்கு மருந்தப்பா அது என்கிறார். அதாவது பிறப்பு என்ற வியாதி உனக்குநீங்கி பகவானோடு ஐக்கியமாக வேண்டுமாயின் பகவான் சேவையும் பாகவத சேவையும் நீ செய் என்கிறார் நாயகி ஸ்வாமிகள்.

கே²ளுந் கெ²ள்நக மொந்நு – ஹரிக்
க³வஸ்தெமாக் ஸிந்நக மொந்நு – யோக்
வேளும் அவை தொக புந்நு–பி⁴த்தர்
மூளுன் கடி ஸொடை¹ ஏ தி³ந்நு.

வெறும் விளையாட்டுக்களில் மூழ்கி விடாதே மனமே!. பரந்தாமன் ஸ்ரீ ஹரியின் திருநாமங்களைப் பாடுவதில் தளர்ச்சி கொள்ள வேண்டாம். பகவானுடைய நாமம் ஒரு முறை கூறினாலே உனக்கு புண்ணியம் உண்டு. அவ்வாறு பகவானுடைய நாம உச்சரிப்பால் உனக்கு கிடைக்கும் லாபத்தை தெரிந்துகொள். பகவானுடைய நாமத்தை உச்சரித்த அத்தினமே மறுபிறப்பு என்ற வேர் உன்னிடமிருந்து அறுக்கப்பட்டுவிடும். வீடு பேற்றினை அடைந்து பகவானோடு ஒன்றிடுவாய் என்கிறார்.

ஹூடிநிம் பி³ஸிநிம் சல்நிம் ஹோங்கும்
நடனகோ³பால் த்⁴யான் ஸொன்னொகொ மொந்நு.

எழும் போதும், அமரும் போதும், நடக்கும் போதும் ஏன் தூங்கும் போதும் ஸ்ரீமந் நாராயணனான நடனகோபாலனை தியானம் செய்வதை விடாதே என்று கூறுகின்றார். எழும் போதும், அமரும் போதும், நடக்கும் போதும் என்று கூறுகின்றார், ஒத்துக் கொள்ளலாம். தூங்கும் போதும் என்றும் கூறுகின்றாரே. தூங்கும் போது அவரை எப்படி தியானிக்க முடியும் என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா?. உறங்கச் செல்லும் சமயம் மற்ற எல்லா எண்ணங்களையும் அறவே மனத்திலிருந்து அகற்றி பகவானை நினைத்து படுத்தோமாயின் அதுவே இறை தியானமாகின்றது. அப்போது சுவாமிகள் கூறும் அறிவுரையை நாம் கடை பிடித்தவர்களாகின்றோம். நாவினிக்கச் செய்யும் பகவத் நாமாவளி ஒன்று.

ஸங்கு சக்ர பீதாம்ப3ர தா4ரி
முரளீ த4ர கோவர்த4னதா4ரி
ஸங்கு சக்ர பீதாம்பர தாரி
முரளீ தர கோவர்தன தாரி

ஒரு முறை நாயகி சுவாமிகள் ஸ்ரீரங்கம் சென்றிருந்தார். அங்கு பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதரை மனங்குளிர தரிசித்தார். பெரும் உவகை அடைந்தார். பேரின்ப வெள்ளத்தில் மூழ்கினார். அந்த பேரானந்தத்தால் அவர் நாவினின்று எழுந்தது ஒரு நாமாவளிப் பாடல். இதோ படியுங்கள்.

க3வெதி ஸ்ரீ ரெங்கா3க் கெள3நொ
பொ3வெதி ஸ்ரீ ரெங்கா3க் பொ3வ்நொ
ஸியெதி ஸ்ரீ ரெங்கா3க் ஸநோ அமி
ஜிவெதி ஸ்ரீ ரெங்கு3 மூஸ் ஜிவ்நொ.

ஸ்ரீ ரெங்கநாதரின் அழகை அனுபவித்து அந்த ஆனந்தத்தில் ஸ்வாமிகள் கூறுகிறார். பாடினால் ரங்கநாதரைப் பாட வேண்டும், அழைக்க வேண்டுமானால் ரங்கநாதரை அழைக்க வேண்டும், பார்க்க வேண்டுமெனில் ரங்கநாதரை பார்க்க வேண்டும். நான் வாழவேண்டுமாயின் ஸ்ரீ ரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கும் திருவரங்கத்தில் தான் வாழ வேண்டும் என்கின்றார் நாயகி ஸ்வாமிகள். இத்தகைய ஒரு நிலையை ஸ்வாமிகள் அடைந்துள்ளாரெனில் அவர் எத்தகைய பேரானந்தத்தில் திளைத்திருக்க வேண்டும், வேறொரு கண்ணிவகைப் பாடலில் ஸ்வாமிகள் மேலும் கூறியுள்ளார்.

ஜியே திந்3நுஜத உராவ்
ரி: யெ தி3ந்து ஜாநாமுல்லாம்.
ரங்க3ா ரங்க3ா மென் க3வோ

இதுவரைக்கும் கழிந்த நாட்களை விட்டு இனி மீதமிருக்கும் வாழ்நாட்கள் கழியா முன் 'ரங்கா' என்று பாடுங்கள்.

ஸ்ரீரங்கநாதனைப் பாடினால் ஏதாவது பலன் நமக்கு உண்டா? என வினா எழுகின்றது. அதற்கு விடை அளிக்கின்றார் இன்னொரு நாமாவளிப் பாடலில். படியுங்கள்.

ஒ ரெங்க3 ஸாயிதூ கொங்கஸாயி – தொக
பொங்கெக3 க3வி பொ3 வெத் தெங்கஸாயி
தெங்க உன்னகாயி தூ ஸ் பா3புமாயி – தி3வ்ய
ஸெங்கு செக்குருநு ஸேவ தே3யி தே3யி

ஸெங்கோ$^{3}$ஸி ரெ:ய்லோயி ஸெங்ஹொய்
தொ$^{3}$ளர் ஸெய்லோயி.

ரெங்கநாதா ! நீ யாரை பார்ப்பாய்? உன்னை அன்புடன் பாடி அழைப்பவரை நீ பார்ப்பாயல்லவோ. அப்படி உன்னுடைய அருட்பார்வை கிடைக்கப் பெற்றவர்க்கு என்ன குறைவு உண்டு? நீயே தாயும் தந்தையுமாவாய். சங்கு, சக்ரத்துடன் புனித தரிசனம் தருவாய் கூடவே இருப்பாய் துணையாய் இருந்து உனது அருட் கண்ணினால் பார்ப்பாய். இதைவிட வேறு என்ன வேண்டும் நமக்கு?. ஸ்ரீரங்கனைப் பாடும் பிரிதொரு நாமாவளி இதோ.

ஹுங்கி து$^{4}$ள்னாரி: யேஸ்.
ரெங்க$^{3}$ நாத$^{2}$ா மொகொ
ஸெங்கு$^{3}$ து$^{3}$ஸர் நீ :
ஸங்கே$^{3}$ஸ் நாதா.

பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீ ரங்கநாதன் உண்மையில் உறங்கியுள்ளாரா என்றால் இல்லை. வெறும் 'அறிதுயில்' தான். எனவே தான் ஸ்வாமிகள் 'ஹுங்கி து$^{3}$ள்னாரியேஸ்' (உறங்கி விழாமலிருக்கிறேன்) நீ உறங்காமலிருப்பதைப் போல் நானும் உறங்கி விழாமலிருக்கிறேன். ஸெங்கு$^{3}$ து$^{3}$ஸர் நீ. ( எனக்கு துணை வேறு யாருமில்லை) நீயே கதி. இதை உன்னிடம் எடுத்துக் கூறுகிறேன் என் இறைவா என்று ஸ்வாமிகள் கூறுகின்றார்.

ஸ்ரீரங்கநாதனைப் பாடிய சௌராஷ்ட்ர ஜகத்குரு ஸ்ரீஹரியைப் போற்றிப் பாடும் அழகான நாமாவளிகளையும் அதில் அடங்கியுள்ள நன்னெறிகளையும் இனி காண்போம்.

ஸ்ரீ மந்நடன கோபால நாயகி ஸ்வாமிகள் அநேக நாமாவளிப் பாடல்களிலும் சங்கீதப் பாடல்களிலும், 'ஹரி' என்ற பெயரை அதிகமாகப் பாடியுள்ளார். பகவானின் பெயர்களில் இந்த 'ஹரி' என்ற பெயருக்கு ஏன் இவ்வளவு சிறப்பு என்று ஆராய்வோம்.

'ஹரி' என்ற சமஸ்கிருதச் சொல் பகவான் விஷ்ணுவைக் குறிப்பதோடல்லாமல் பிரம்மா, இந்திரன், யமன், வாயு, சந்திரன், சூரியன் முதலியவர்களையும் குறிக்கின்றது. அதோடு 'ஹரண' என்ற வினைச் சொல்லானது அபகரித்தல் என்ற பொருளைத் தருகின்றது. அதாவது 'ஹரி' என்ற சொல்லை உச்சரித்த மாத்திரத்தில் நம்மிடம் உள்ள குறைகளை பகவான் அபகரித்துக் கொள்வான்.

ஸூத்தி ஸூசி ஹோரு ர:வோ

பு$^{3}$த்தி$^{4}$ சொக்கட் ஹொய்லோயி

முத்தி$^{3}$ தை$^{3}$ர ஹாதுகு ஹோனா–ஹரி

ப$^{4}$க்தி கரெத் ஜெலும் அவ்னா.

சுத்தமாக இருங்கள், சுத்தமான ஆகாரம் உட்கொள்ளுங்கள். அறிவு பிரகாசிக்கும். மோதிரம் இடக்கைக்கு ஆகாது. ஹரிபக்தி செய்தால் பிறப்பு ஏற்படாது. இதுவே இந்நாமாவளியின் கருத்து. சுத்தம் சுகம் தரும். உடலும் சுற்றுப்புறமும் சுத்தமாக இருப்பின் மனமும் சுத்தமாக, தூய்மையாக இருக்கும், அறிவு பிரகாசிக்கும் என்கிறார். மோதிரம் இடக்கையில் அணியலாகாது ஏன்? இடது கையை மலஜலம் கழிக்கின்ற போது பயன்படுத்துகின்றோம். எனவே இடது கையில் அணியலாகாது என்கிறார்.

ஏதி$^{3}$ந்நு தொர தி$^{3}$ந்நு

ஏ ப$^{2}$ல்லா தி$^{3}$ந்நு கோனக்கி மொந்நு

ஏ பி$^{4}$த்தரும் ஹரிக் க$^{3}$வ்லே

ஹரிக்ருப கரொய் தூ ஜிவ்லே

மோஸ் ஜானொகோ

இன்றைய தினம் உன் தினமாகும். இதற்குப் பின்வரும் நாள் எப்படியோ. மனமே!. உள்ளே ஹரியைப் பாடு ஹரிகிருபை செய்வான். நீ வாழ்வாய். மோசம் போகாதே. ஹரி பக்தியை இன்றே செய்வீர். நாளை செய்யலாம் என்று தள்ளிப் போட வேண்டாம். நாளைய தினம் நிச்சயமில்லை. நேரம் கிடைக்காமல் போய் விடலாம். எனவே ஹரிபக்தியை இன்றே செய்வீர். இதில் மோசம் போகாதீர் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

ஹந்தெ$^{3}$ ஹந்தெ$^{3}$ தா$^{4}$நுகஸ்கி ஹரிக்

ஹாத் தெ$^{3}$க்கட$^{3}$ஸ் தெநொ

பொந்த$^{3}$ய் பொந்த$^{3}$ய் புஜா போ$^{2}$ளுந்–த்யே

அந்தி$^{3}$லெத் ஜாய் அஸ்கி மூளுந்

கோ$^{3}$விந்தா$^{3}$ மெநொ அஸ்கி வேளும்

கோ$^{3}$பாலா மெநொ அஸ்கி வேளும்

நிச்சு நிச்சு ஹுன்னொ ஹுன்னொ

ஹந்தெ$^{3}$ ஹந்தெ$^{3}$ தா$^{4}$நுகஸ்கி ஹரிக்.

சமைத்த உணவை சமைத்தபடியே ஹரிக்கு சமர்பித்து அருந்த வேண்டும். அப்படி செய்பவர் பூஜைக்குரியவர்களாவர். இதை உணர்ந்து கொண்டால் பிறப்பிறப்பு வேர் அறுபட்டுப் போகும்.

ஹுடோ ஹுடோ ஸ்ரீ

ஹரிக் க³வி நடனம் கரொ–

எழுந்திருங்கள், எழுந்திருங்கள் ஸ்ரீ ஹரியைப் பாடி நடனம் செய்யுங்கள்.

ஜகத் குருவான ஸ்ரீ மந்நடன கோபால நாயகி ஸ்வாமிகள் தனது நாமாவளிப் பாடல்களில் கண்ணனை அழைக்கும் பாங்கை இனிக் காண்போம்.

ஸிகாம் லொநி சொரி அகாஸ்ஸெய் தோணும் தைலியே

தே³வகி பெ³டா ஆவி–வஸு

தே³வுகு பெ³டா ஆவி.

தாழியிலிருந்து வெண்ணையை திருடி உண்டவனும் மண்ணை உண்டு அன்னையிடம் தன் அழகு வாயை திறந்து காட்டிய போது வானத்தையே வாயில் போட்டு காண்பித்தவனுமாகிய தேவகி மைந்தனே வா! வசுதேவரின் மகனே வருவாயாக !.

பிறிதொரு நாமாவளியில் கண்ணனை ஸ்வாமிகள் மிகவும் அழகாக அழைக்கின்றார்.

சொட்³டா³ நுமஸ்கிசெடா3வ்

சொட்³டொ³ ஹெறாய் லொனி சொரி

க²யெ அப்ரஞ்ஜி கெ³ட்³டா³ ஆவி தொக

ஸொட்³டு³கி மீ மொர அப்ரஞ்ஜி கெ³ட்³டா³ ஆவி.

கள்ளர்களிலெல்லாம் உயர் கள்ளனாகி வெண்ணெய் திருடி உண்ட தங்கக்கட்டியே வா. உன்னை விட்டு விடுவேனா நான் ?. என் தங்கக் கட்டியே வா! சின்னக் குழந்தைகளை தாய்மார்கள் செல்லமாக தங்கமே என்று அழைப்பது போல் நாயகி ஸ்வாமிகள் தன்னை கண்ணனின் தாயாக பா⁴வித்து கண்ணனை 'தங்கக்கட்டி' என்று செல்லமாக அழைக்கின்றார்.

தாயாக பா⁴வித்து கண்ணனைப் பாடிய ஸ்வாமிகள் நாயகி பா⁴வத்தில் பாடும் நாமாவளியைப் படியுங்கள்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா மீ ஸெஜ்ஜெ கே⁴ர் கெரிநா :

தொர கொ⁴ம்மா தெனோஸ் மீ ஸெய்லே

ஸெய்லே ஸிள்ள தொ³ளொஹோர் மொகொ ஸெய்லே.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ; நான் அண்டை வீட்டுக்காரன் அல்ல. நான் உன் வீட்டுக்காரி தான். என்னைப் பார்ப்பாயாக! உன் குளிர்ந்த பார்வையால் என்னைப் பார்ப்பாயாக என்று கூறுகின்றார்.

கண்ணனைப் பற்றி பாடும் இன்னொரு நாமாவளி.

ஸெத்துகன் ரி : யெஸ்தெநொ

மொத்துகா⁴ம் பொடெ³ ஸ்தெநொ

ரெத்தும் ஸங்கே³ஸ் தொகொ மொகொ (ஸெ)

உண்மை வடிவாக இருந்தவனும், தயிர் கடையும் மத்தினால் அன்னையிடம் அடிவாங்கியவனுமாகிய கண்ணன் பாரதப் போரில் ரதத்தில் அமர்ந்து அர்ஜுனனுக்கு எடுத்துரைப்பது போல் உனக்கும் எனக்கும் கீதோபதேசம் செய்தான் என்று ஸ்வாமிகள் கண்ணன் கீதோபதேசம் செய்த செய்தியை இந்நாமாவளியில் கூறுகின்றார்.

கீர்த்தனை ஒன்றில் நாயகி ஸ்வாமிகள் கண்ணனை எவ்வளவு உரிமையோடு கட்டளையிடும் தோரணையில் அழைக்கின்றார் பாருங்கள்.

வாஸு தே³வா க்ருப

கர்நாஸ்தரியெஸ்தெகாய்

வத்தகேர் அவி கிநு அத்த மொர ஸெர.

வசுதேவனின் மைந்தனாகிய வாசுதேவா ! அருள் புரியாமல் இருப்பதேன். இப்பொழுதே வந்து என்னிடம் பேசுவாயாக !

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை பாடிய சௌராஷ்டிர ஜகத்குரு இனி ஸ்ரீ ராமபிரானை நோக்கி பாடும் நாமாவளிப் பாடல்களைப் பாருங்கள்.

ஸீதா ராமா கீதா நேமா

பதவி தெனொ பரந்தாமா

வேதாதி வேதும் ஸியேஸ் பூமா

ஸதா தொர த்யான் ஸ்ரீராம் ராம்.

ராமனில் பல்வேறு வகையில் துதித்து கோதண்டராமன், ராஜாராமன், சீதா ராமன் என்று வர்ணிப்பர் பக்தர்கள். நாயகி ஸ்வாமிகள் அழைக்கும் ராமன் சீதா ராமனாவான். அன்னை சீதையோடு இணைந்த சீதா ராமனே! கீதையின் வழியில் நடந்தவனே ! இரண்டாவது அடியில் ஸ்வாமிகள் பதவியைக் கேட்கின்றார். என்ன பதவியைக் கேட்கின்றார்? தற்காலத்தவர் பற்பல பதவிகட்காக அலைகின்றார்களே அது போன்றா? இல்லை, இல்லை. இவர் பெரிய பதவியைக் கேட்கின்றார். அது தான் மோட்ச பதவியாம். மோட்ச பதவியை அளிக்க வல்லவன் பகவான் ஒருவனே. கேட்க வேண்டியதை தர வல்லவரிடம் தான் நாயகி ஸ்வாமிகள் கேட்கின்றார். வேத வேதாங்களில் உன்னைக் கண்டேன். எப்பொழுதும் உன்னையே தியானிக்கிறேன். ஸ்ரீ ராமமூர்த்தியே! என்று கூறுகின்றார்.

ராமனைப் பாடும் பிரிதொரு நாமாவளியைப் பார்ப்போம்.

ஸீதாராம் தொ[3]ளர் ஸெய்லெ ராம்
ஸேவோ மொகொ தூ தீ[3]டெ[3]ராம்
ஏ ஜெகதூர் தொ[2]வி கே[2]ள் கெந்நொக ராம்
ஏ ஜென்மு க[2]ட[3]ன் ஸெக்காநி ராம். (ஸீ)

இந்நாமாவளியில் நாயகி ஸ்வாமிகள் கெஞ்சும் பாவனையில் ராம பிரானை நோக்கிப் பாடுகின்றார். ராமா ! உன் அருட் கண்ணினால் என்னைப் பார்ப்பாயாக ! உனக்கு தொண்டு செய்யும் பாக்கியத்தை எனக்கு அருள்வாயாக! இவ்வுலகில் என்னை வைத்து விளையாடதே என் அப்பனே! இவ்வுலகில் பல முறை பிறந்து இறந்து எனக்கு சலித்து விட்டது. மீண்டும் மீண்டும் இவ்வாறு செய்வது என்னால் சகிக்க முடியவில்லை. எனவே ராம பிரானே! இதிலிருந்து விடுபட மோட்சத்தை அளிப்பாயாக! என்று ஸ்வாமிகள் பாடுகின்றார்.

ராமபிரானை குறித்து அழகுத் தமிழில் ஸ்வாமிகள் பாடியுள்ள நாமாவளிகளைப் பார்ப்போம்.

ஸ்ரீ ராமனை துதி செய் மனமே
ஸ்ரீ வாமனை கதியென்றிருதினமே
எமனை அடிக்கும் வில் குணமே
காமனை ஜெயிக்கும் சொல் மனமே.

மனதை விளித்து பாடுவதாக அமைந்துள்ளது இந்நாமாவளி. ஏ மனமே ! ராமனை துதி செய்வாய். வாமன அவதாரத்தில் வாமனாக அவதரித்தவர் இவரே. அவரை கதி என்று இருப்பாய் எமனை துரத்தி அடிக்கும் வில்லாக அது அமையும். காம எண்ணத்தை வெற்றி கொள்ளச் செய்ய வல்லதாகும் என்கிறார் நாயகி. அடுத்த நாமாவளியைப் பாருங்கள்.

பட்டாபிராம் பட்டாபிராம்
துஷ்ட நிக்ரஹரி பட்டாபி ராம்
பட்டாபிராம் பட்டாபிராம்
ஸிஷ்ட பரிபாலன பட்டாபிராம்
பட்டாபிராம் பட்டாபி ராம்
அஷ்டாக்ஷரப் பொருளே பட்டாபிராம்

இந்நாமாவளியில் ஸ்ரீ ராமன் துஷ்ட நிக்ரஹரி தீயவர்களை அழிப்பவன், ஸிஷ்ட பரிபாலனன், அண்டியவர்களை வாழ வைப்பவன் என்றும் அஷ்டாக்ஷரப் பொருளானவன் என்று வர்ணிக்கின்றார்.

ஸ்ரீராம் ஸீதாராம் ஸ்ரீஜெகந்நாத ராம்

ஸ்ரீமந் நாராயண ஜேஜேஜே ராம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண ஹரி நாமங்களைப் பாடிய ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள் பின்வரும் நாமாவளிகளில் 'கோவிந்த' நாமத்தை வர்ணிக்கின்றார். 'கோவிந்த' நாமத்தின் சிறப்பை தனக்கே உரிய பாணியில் சௌராஷ்டிர நடையில் எளிய முறையில் கூறும் அழகைப் பாருங்கள்.

கோவிந்த நமமூஸ் கு$^{3}$ள்ளே பொள்ளொ

க$^{2}$ள்ளி க$^{2}$வகா தா$^{3}$ஸுன் துமி

ஜீப் ஹெள்னா முல்லோ

அவி மூக$^{3}$மின்னா முல்லோ.

கோவிந்த நாமத்தை இனிப்பான பழமாக வர்ணிக்கின்றார் ஸ்வாமிகள். கோவிந்தநாமம் தான் இனிப்பான பழம். அடியார்களான நீங்கள் எடுத்து அருந்துங்களேன். எமன் உயிர் எடுக்கும் முன் கூட்டம் சேரும் முன் என்கிறார். உட்பொருளைக் கவனியுங்கள். உண்மையில் நாம் அருந்தும் பழங்கள் இந்த உடலுக்குத் தான் இனிப்பானவை. உண்மையில் இனிப்பானதும் ஆத்மாவுக்கு இனிப்பானதுமான பழம் கோவிந்தநாமம் தான். அந்த இனிப்பான பழத்தை இறையடியார்களான நீங்கள் எடுத்து சாப்பிடுங்களேன் என்று கெஞ்சுகின்றார். தான் அருந்தி ஆனந்தம் பெற்றது போல் நம்மையும் கோவிந்த நாமம் அருந்தி ஆனந்தம் பெறும்படி கூறுகின்றார். பழத்தை எப்பொழுது சாப்பிடச் சொல்கின்றார் தெரியுமா? எமன் வந்து உயிர் எடுக்கும் முன் என்கிறார். அப்படியெனில் உயிர் போவதற்கு சில தினங்கள் முன்பு என்று அர்த்தமல்ல. எமன் நம் கூடவே இருந்து நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறான். இன்றோ நாளையோ உயிர் போகும் நாள் நமக்குத் தெரியாது. எனவே இன்றே இத்தருணமே கோவிந்த நாமத்தை பழமாக அருந்துங்கள் என்கிறார் ஸ்வாமிகள். இறுதியாக கூறுவது என்ன புரிகிறதா? 'அவிமூக$^{3}$மின்னா முல்லோ' வந்து கூட்டம் சேரும் முன்? கூட்டமா? என்ன கூட்டம்? பொதுக்கூட்டமா ? எமன் வந்து உயிரை எடுத்துக் சென்றபின் மிஞ்சுவது என்ன? உடல் தான். அதாவது பிணம், அதை இறுதியாகக் காணகூட்டம் கூடுமே அந்த கூட்டத்தைத் தான் குறிப்பிடுகின்றார் 'சௌராஷ்டிர மஹாகவி'. அதாவது இறந்து போகும் முன் பகவானின் திருப்பெயராகிய கோவிந்த நாமத்தை உச்சரியுங்கள் என்று ஸ்வாமிகள் வேண்டுகின்றார்.

அப்பை$^{3}$கி கே$^{3}$ாவிந்த$^{3}$ நமம்
கொப்பு$^{3}$ ஸொம்மர் அத்$^{3}$தி கு$^{3}$ள்ளே
அப்பை$^{3}$கி மெனிகு ஜெலும்
கொ$^{2}$ப்ா$^{3}$க் ஹிப்பி$^{3}$ ரா:ஸ்தேரப்பா$^{3}$
மொந்நு மீ பாய்ம்பொடு$^{3}$ ஸ்தொகோ
மொர போடும் தூ$^{3}$த் கா$^{4}$ல் ஆவ்
புந்நவை தொகொ.

கரும்பை விட தித்திக்கும் கோவிந்த நாமம் கிடைக்குமா? மனித ஜன்மம் கிடைக்குமா? என்று நிற்குமப்பா? மனமே உன்னை வணங்குகிறேன் என் வயிற்றில் பால் வளர்க்க வருவாய். புண்ணியம் உனக்கு. இவை நாமாவளிப் பாடலில் தமிழ்மொழி பெயர்ப்பாகும். உட்கருத்தைப் பார்ப்போம். முந்தைய நாமாவளியில் கோவிந்த நாமத்தை இனிப்பான பழமாக வர்ணித்த ஸ்வாமிகள் இந்நாமாவளியில் கரும்பை விட தித்திக்கச் செய்யும் பொருளாக வர்ணிக்கின்றார். மனித ஜன்மம் கிடைக்குமா என்று கூறுவது ஏன்? அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது என்று ஔவைப் பிராட்டி கூறியிருப்பதைக் கவனியுங்கள். பிறப்பு வகைகளில் உயர் பிறப்பு மனித ஜன்மப் பிறப்பாகும். கிடைப்பது அரிதானது. அது நமக்கு கிடைத்திருக்கின்றது. ஆனால் இனியும் பிறப்பு எடுக்க வேண்டும் என்று எண்ணலாகாது. இப்பிறப்பே இறுதியாக்கிக் கொள்ள பகவானின் நாம உச்சாடனம் தான் சிறந்த வழியாகும். எனவே தான் நாயகி ஸ்வாமிகள் பகவானை நோக்கி கூறுகிறார் –– என்று நிற்குமப்பா ( கொப்பாக் ஹிப்பி ரா:ஸ்தேரப்பா$^{3}$ ) என்று மேலும் மனதை நோக்கி கூறுவதைப் பாருங்கள். மனமே! உன்னை நான் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். என் வயிற்றில் பால் வளர்க்கச் செய்வாய். எப்படி? பகவானை தியானம் செய்வதன் மூலம் பகவத் சிந்தனை மூலம் பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கீதையில் கூறியுள்ளபடி மனம், வாக்கு, காயங்களால் செய்யும் காரியங்களை பகவானுக்கு அர்ப்பணமாக செய் மனமே என்று கூறுகின்றார். "உனக்கு புண்ணியமாகும்". ( புந்நவை தொகொ ) என்று புண்ணியம் கிடைக்கும் வழியைக் கூறி நாமாவளியை முடிக்கின்றார்.

'கோவிந்த' என்று தொடங்கும் பிரிதொரு நாமாவளியைப் பார்க்கலாம்.

கோ3விந்தா3 கோ3பாலா மெனி
ஹிந்தோ3ஸ் ப4ஜன கரோ
ஸொந்தொ3 ர:நி காய் நிஜமு அமி
ஸொந்தொ3 ர:நி காய் நிஜமு.

'கோவிந்தா கோபாலா ! என்று இன்றே பஜியுங்கள். நாளை நாம் இருப்பது என்ன உறுதி ? நாம் நாளை இருப்பது என்ன உறுதி ? பகவானை நாளை தியானித்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போட வேண்டாம். நாளை நாம் இருப்பது எப்படி உறுதியாகக் கொள்ள முடியும்? அதில் உறுதி கொண்டு தள்ளிப் போடாதீர். இன்றே பகவானை பஜிப்பீர். ஸ்வாமிகளின் உபதேசப்படி நடந்து உய்வுறுவோமாக.

உடம்பின் நிலையாமை பற்றியும் இறைவனை துதிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் தொடர்ந்து தனது நாமாவளியில் சௌராஷ்டிர மஹாகவி கூறுவதைப் படியுங்கள். இதோ நாமாவளி.

கோன்கொங்கு4 ட் ஜியெத்காய்
கோன்கிஸொ ஹொயெத்காய் அம்கொ
ஸான்ஹரிர:த தா4க்காய் முல்லோ
பான்லிக்கெ தா4நுக் ரா:ய் ரா:ய்
பு2ள்ளொகரெ போ2ளுந்கா ஸொடி3 ஜாய் ஜாய்
லேத் அநெ தி3ந்து ஸெரேத்
ஸெரிர் பொடி3 ஜாய் ஜாய்
ர:தொஸி நமம் காந்தீ3 ஐகுலுவொ ஹரி ஸாய் ஸாய்
ப4ஜநயேட் கோந்கரெதிந்நு ஹோய் ஹோய்
தே3வவி பதா3ல் தே4ர் மெநி தே3ய் தே3ய்
தெ3க்டா மொந்நு பநிகர்லி சொக்கட்
கு3ண்ணு ஸெந்தோ ஹரி த்4யாந் தி3ந்து கோ3
ஜவள்நாஸ்தக் கரோ பு2ரோ ஜெந்மு.

இதன் அர்த்தம் என்ன என்பதை பார்ப்போம். "யார் எங்கு போனால் என்ன? யார் எப்படி இருந்தால் என்ன? நம்மை பார்ப்பதற்கு பகவான் ஹரி இருக்கும் போது பயம் என்ன? (பிறப்பதற்கு) முன் பிரம்மா எழுதிய ( ஜாதகம் ) படி எதுவும் இருக்கும். முன்பு செய்த வினைகளா விட்டுப் போகும் கடன் முற்றுப் பெறும் தினம் வந்தவுடன் இந்த உடம்பு விழுந்து போய்விடும். எனவே இருக்கும் போது இறை நாமத்தை காது கொடுத்து கேளுங்கள். பகவான் ஹரி பார்ப்பார். இறை பஜனை யார் செய்தாலும் பலனுண்டு.

இறைவன் வந்து மோட்ச பதவியை இந்தா என்று நமக்களிப்பான். கல் மனத்தை நீர் மனதாக மாற்றிக் கொண்டு, 'நல் மனதுடன் நாளை வீணாக்காமல் தியானம் செய்யுங்கள் போதும் பிறப்பு." நாயகி ஸ்வாமிகட்கு பிறப்பு எடுத்தலில் தான் எத்தனை வெறுப்பு பார்த்தீர்களா? 'புரோ ஜெந்மு' போதும் பிறப்பு என்று இரண்டே வரிகளில் தனது எண்ணத்தை வெளியிடுகின்றார். யார் எப்படி எப்படிப் போனால் என்ன? யார் எப்படி இருந்தால் என்ன? உனக்கென்ன கவலை? நம்மை கவனிப்பதற்குத்தான் ஹரி இருக்காரே. தலையில் பிரம்மா எழுதியபடிதான் எதுவும் நடக்கும். எனவே நடப்பவைப் பற்றி ஏன் நாம் அலட்டிக் கொள்ள வேண்டும்? கடனை தீர்த்துக் கொள்ள இந்த பிறப்பு எடுத்திருக்கின்றோம். கடன் தீர்ந்தவுடன் இவ்வுடம்பு கீழே விழுந்து விடும். எனவே பிறப்பு இறப்பு அற்றநிலை அடைய வேண்டுமானால் உயிரோடு இருக்கும் போதே பகவான் நாமத்தை கேளுங்கள். பஜனை செய்யுங்கள். கல் போன்ற இறுக்கமான மனதை தண்ணீர் போன்று இளகிய மனதாக மாற்றிக் கொண்டு ஹரி தியானம் செய்வீர். போதும் இந்த ஜன்மம். இந்த ஜன்மமே கடைசியாக இருக்கட்டும். இனி பிறப்பு வேண்டாம். மோட்சமடைவதற்கு வழி ஹரி தியானமே. அதை இன்றே செய்வீர். நாளை வீணாக்க வேண்டாம் என்கிறார் ஸ்வாமிகள்.

மேலும் இன்னொரு நாமாவளியில் நாயகி ஸ்வாமிகள் கூறுவதைப் பாருங்கள்.

கெட்டெம் துரி ரி:யேஸ் ஹரி
ஹெட்டைனாமுல்லாம் தூ தெக தே4ரி
பு2ட்டி ஜேடை3 ஸெரிர் தூ கோரி
மொ:ட்டோ தெனோஸ் அம்கொ ஹரி
மோக்ஷி தெ3னார் ஹரிஸ் பரத்வம்
ஸாக்ஷி ப்ரஹலாது சரிதும்.

நரசிம்ம அவதாரத்தில் பகவான் ஹரி மரத்தூணிலிருந்து வெளிப்பட்டார். நீ இறந்து பிணமாகி உன்னை எடுத்துச் செல்வதற்கு முன் அவனை பற்றிக் கொள். மண்பானை போன்று உடைந்து போகும் இவ்வுடம்பு. நமக்கெல்லாம் பெரியவர் ஹரியாவார். மோட்சத்தை அளிப்பவர் ஹரியாவார். இதற்கு தகுந்த சாட்சி ப்ரஹலாத சரிதம் இருக்கின்றது. எனவே பொழுதை வீணாக்காமல் ஹரி பஜனை செய்வீர்.

பகவானைப் போற்றிப் பாடிய சௌராஷ்டிர குர்தாஸர் தீய நெறியில் செல்பவர்களை நோக்கி தனது நாமாவளியில் எச்சரிக்கின்றார். நல்வினை

செய்பவன் நன்மைகளையும் தீவினை செய்பவர் தீமையையும் அனுபவிப்பவர். யாருக்கும் தெரியாமல் தீவினை செய்வதாக கருத வேண்டாம். பகவானுக்கு ஒருவனின் நல்வினை, தீவினை இரண்டுமே தெரியும். தீவினை செய்பவர்கள் அதற்கேற்ப நரக வேதனை அனுபவிக்க நேரும் என்று தீய வழியில் செல்பவர்களை எச்சரிக்கின்றார். நாமாவளியைப் பார்ப்போம்.

நஜ்ஜெ காம் கர்த்தி கை கர்னார் மீ
நா: மெனதி நரக ப்ராப்தி ஹோய்
பு$^2$ஜ்ஜாய் சொக்கட் வாடு மவோ
நஜ்ஜவானா தே$^3$வ் ஸாய் ஸாய். ஸாய்

கெட்ட, தீய, வேண்டாத காரியங்களை செய்து விட்டு நான் செய்யவில்லை என்று கூறினால் அவர்கட்கு நிச்சயமாக நரகம் தான் கதியாகும். போதும் நல்வழிக்கு வாருங்கள். நல்வழிக்குத் திரும்பினால் கெட்டுப் போகமுடியாது. பகவான் பார்ப்பான். சிலர் மற்றவர்கட்கு தெரியாது என்று எண்ணிக் கொண்டு தீய காரியங்களை செய்கின்றார். உண்மையில் எல்லாவற்றையும் அறிவான் பகவான். தீய காரியங்களைச் செய்பவர்கட்கு மரணத்திற்குப் பின் நரக கதி என்பது உறுதியானதாகும். எனவே போதும், நல்வழிக்குத் திரும்புங்கள். நல்வழியில் செல்பவர் கெட்டுப் போக மாட்டார்கள். பகவான் அவர்களைக் கவனித்து கரையேற்றுவான் என்கிறார் சௌராஷ்டிர சைதன்யர்.

மேலும் கூறுவதைக் கவனியுங்கள்.

நஜ்ஜாஸ்தெ காமுன் கரஸ்தெனஸ்கி
மஹா ப்ரளயம்லெந்து உஜி உஜி மொரஸ்தெநு
பு$^2$ஜ்ஜாய் ஏ சொக்கட் ஜெலும் ஸெர
ஹரிக் க$^3$வொ தி$^3$ந்நு கோ$^3$ஜியெத் பீ$^2$ர்
ஜெலுமவை ஸவொ ராதி$^3$ தீ$^3$ஸூம்
ஹரிஹோர் ஹட்வன் தெ$^2$ வொ ஜெலும்
பொஸாய் ஸெனம் ஸெனம் ஹரிக் க$^3$வொ.

தீய காரியங்களைச் செய்பவர்கட்கு ஏற்படும் கதியைக் கூறுகின்றார் ஸ்வாமிகள். ப்ரளயம் ஏற்பட்டு இவ்வுலகம் அழியும் வரை பிறந்து பிறந்து இறப்பர். எல்லா பிறப்பும் மனிதப் பிறவியாக இருக்குமா? இருக்காது. ஏன் இந்த வீண் கஷ்டத்தில் சிக்கித் தவிக்க வேண்டும்? போதுமய்யா போதும். இப்போது நாம் எடுத்திருக்கும் மனித ஜன்மம் மேலானது. முக்தியைப் பெறுவதற்கு ஏற்ற ஜன்மம் மனித ஜன்மமாகும். எனவே இந்த ஜன்மத்தின்

துணை கொண்டே ஹரியைப் பாட வேண்டும். ஹரியைப் பாடாமல் நாளை வீணாக்கினால் மறுபடியும் பிறப்பு ஏற்படும். எனவே இரவும் பகலும் ஹரி மீது எண்ணம் வைத்து தியானம் செய்யுங்கள். பிறப்பு உடனடியாக துடைக்கப்படும் எனவே உடனே ஹரியைப் பாடுங்கள். பிறப் பிறப்பற்ற நிலை பெற்று மோட்ச பதவியை அடைய வேண்டுமாயின் பகவானை பூஜியுங்கள் என்று வேண்டுகிறார் ஸ்வாமிகள்.

எனவே தீய வழியில் செய்வதை விடுத்து நல்வழியில் திரும்பி பகவானைப் பாடி இன்புறுவீர்களாக!.

சௌராஷ்ட்ர வல்லபாசார்யரான ஸ்ரீமந் நடனகோபாலநாயகி ஸ்வாமிகள் தொடர்ந்து தனது நாமாவளிகளில் கூறுகின்ற அரிய கருத்துக்களைப் பார்ப்போம். நாமாவளியை படிக்கும் முன் ஒரு கற்பனையை நாம் நாமாவளிக்காக உருவாக்கிக் கொள்வோம். நாயகி ஸ்வாமிகட்கு நண்பர் ஒருவர் இருந்தார். அவர் ஸ்வாமிகளைப் பார்த்துக் கேட்கின்றார், 'என்னப்பா நீ சதா சர்வ காலமும் இறைவனைப் பற்றி பாடி பொழுதைக் கழிக்கின்றாய். உனக்கு என்ன பலன் கிடைத்து விடப் போகின்றது?' அதற்கு ஸ்வாமிகள் என்ன பதில் கூறுகின்றார். அந்த பதிலை நாமாவளியில் பார்ப்போம்.

> வெக்கி வெக்கி ஹரிக் தெ$^{3}$க்கி மீ க$^{3}$வ்லேத் ரி: யேஸ்
> ப$^{4}$க்திஹோர் தே$^{3}$வு த்$^{4}$யாநும் முக்தி பொந்து$^{3}$ஸ் ஸா
> அத்தொ மீ முக்தி பொந்து$^{3}$ஸ் ஸா.

என் அருமை நண்பா! தேடித் தேடி ஹரியை நான் பாடிக் கொண்டிருந்தேன். பக்தியுடன் இறை தியானத்தில் ஆழ்ந்து முக்தியை அடைவேன். பார் நண்பா !. இப்பொழுது நான் முக்தியை அடைவேன் பார் என்று நண்பனை நோக்கி பதில் கூறுகின்றார். "முக்தி அப்பய்' முக்தி கிடைக்கும் என்று கூறாமல் முக்கி பொந்துஸ் ( முக்தியை அடைவேன்) என்று உறுதியாகக் கூறுகின்றார் ஸ்வாமிகள். அவரது எண்ணத்தில் தான் எவ்வளவு உறுதி. நண்பருக்கு பதிலளித்த நாயகி ஸ்வாமிகள் மேலும் கூறுகின்றார்.

> ரோக்ஹால் ஸரீர் ஜேடை$^{3}$
> தா$^{4}$க்ஹால் ஸரீர் ஜேடை$^{3}$
> ஸாக்ஹால் ஸரீர் ஜேடை$^{3}$ ரே
> வாக் ஐகி தூ அத்த தே$^{3}$வுக்
> தெ$^{3}$க்கஸ்தக் த்$^{4}$யாணும் ஸா ப$^{4}$வ்
> ரோக் மொரநுஜ்வாவ் ஜேடை$^{3}$ரே.

இவ்வுடம்பு நோயினால் அழிந்து போகும். உலக பயத்தினால் அழிந்து போகும். அதிர்ச்சியினால் அழிந்து போகும். எப்படியோ உடம்பு அழியப் போவது திண்ணம். ஆதலால் நீ இப்பொழுது நான் சொல்வதைக் கேள். தியானத்தில் ஆழ்ந்து இறைவனைக் காண்பாயாக. பெரும் வியாதியான பிறத்தல், இறத்தல் நீங்கிப் போகும் என்கிறார் சௌராஷ்ட்ர ஆசார்யர். மேலும் கூறுகின்றார்.

மொந்நு தெ2வி ஸந்தி3
தே3வுகு தூ அந்தி3
மோக்ஷி தே3ய் ஜீவுக் ஸாந்தி.

மனதை இறைவனோடு இணைத்துக் கொள். கடவுளை நீ எட்டி பற்றிக் கொள். இவ்வுயிருக்கு அமைதியை அளிக்கும் மோட்ச பதவியை இறைவன் அளிப்பார்.

" சௌராஷ்டிர மஹாகவி" ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள் பக்தர்களை நோக்கி புண்ணியம் தேடும் மார்க்கத்தை உபதேசம் செய்து வருகின்றார். அச்சமயம் பக்தர்களில் ஒருவன் ஸ்வாமி நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறார். அந்த பக்தரை நோக்கி ஸ்வாமிகள் கூறுகின்றார். நயம்மிகு நாமாவளியை படித்தபின் உரையை பார்ப்போம்.

புந்நு கர்நகொ பாபு கர்நகொ — நாகும்
ஸொந்நா தே3வுகு ஸொண்ணகொ
தி3ந்து கோ3 ஜவண்ணகொ.

ஸ்வாமிகள் என்ன கூறுகின்றார்? உன்னால் புண்ணியம் தேட முடியவில்லையா, சரி போகட்டும். நீ புண்ணியமும் செய்ய வேண்டாம். பாபமும் செய்ய வேண்டாம். இரண்டுமே வேண்டாமப்பா. ஆனால் ஒன்றை மறந்து விடாதே. பகவானை விட்டு விடாதே. தங்கத் தேவனான ஸ்ரீமந் நாராயணனை விட்டு விடாதே. மூச்சோடு மூச்சாக பற்றிக் கொள். அவ்வாறின்றி நாளை வீணாக கடத்தாதே. பகவானை ஸ்மரிக்காத நாள் வீணான நாளாகும். மேலும் ஸ்வாமிகள் கூறுகின்றார்.

தோணு கெக்ள வெக்ள நமம் மெந்நகொ
வேணுகோ3பால் ஹரி நமம் ஸொண்ணகோ.

நாவைக் கொண்டு இனிய சொற்களையே பேச வேண்டும். வேண்டாத, பயனற்ற சொற்களைக் கூற நாவை பயன்படுத்தாதே. ஸ்ரீ வேணுகோபால ஹரி நாம உச்சரிப்பை விட்டு விடாதே என்கிறார் ஸ்வாமிகள்.

தொடர்ந்து ஸ்வாமிகள் ஹரி சரிதத்தை நாம் ஏற்றுக் கொள்ள

வேண்டிய அவசியத்தை வலியுறுத்திக் கூறுகின்றார்.

பஜெமெனி க²ன்ளெ ஹரி சரிதுன்
நிஜம்மெனி க³வ்லெ ஹரி சரிதுன்
நஜ்ஜாநகொ ஸங்கே³ஸ் ஜல்லெ
பு²ஜ்ஜாய் ஜெலும் மோக்ஷ மைலெ.

ஹரி சரிதத்தை வேண்டும் என்று பற்றிக் கொள். ஹரி சரிதத்தை உண்மையென உணர்ந்து பாடு. அவ்வாறின்றி அலட்சியப்படுத்தி கெட்டுப் போகாதே. சொல்வதை உணர்ந்து கொள். போதுமப்பா பிறப்பு. பகவானிடம் மோட்சத்தைக் கோரிப் பெறுவாயாக.

நம் ஜகத்குரு தனது நாமாவளிகளில் தொடர்ந்து அருளிய உபதேசங்களைப் பார்ப்போம். நாமாவளியை ஒரு முறைப் படியுங்கள்.

ஸெத்துலா திந்நாள் தூமி ஸாரியா நிஹா தூமி
ஸாரியா நிஹா தூமி ஸாரியா நிஹா
சித்து தொ²வோ ஸ்ரீராம் சரணுமு ப்ரணவ
ரெத்து அநி தெமொ பொ³ல்ஜாய்.

இந்நாமாவளியில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஸெத்துலாதிந்நாள்' என்ற சொற்களை ஏதோ ஒரு திருவிழாவைத்தான் ஸ்வாமிகள் குறிப்பிடுகின்றாரோ என்று எண்ணி எனது தாயாரிடம் அது என்ன 'ஸெத்துலாதிந்நாள்' என்று கேட்டேன். மதுரையில் ஸ்ரீபிரஸன்ன வேங்கடேசப் பெருமாள் தேவஸ்தான பங்குனித் திருவிழாவைப் போன்றோ ( பொங்கின் திந்நாள் ) சித்திரைத் திருவிழாவைப் போன்றோ இந்நாமாவளியில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஸெத்துலாதிந்நாள்' ஏதோ ஒரு திருவிழாவின் பெயர் என்று எண்ணி எனது அன்னையிடம் விளக்கம் கேட்டேன். அவர்கள் சிரித்த வண்ணம் அளித்த பதில் எனக்கு வியப்பைத் தந்தது. அதாவது ஸெத்துல்லா திந்நாள் என்று ஸ்வாமிகள் குறிப்பிடுவது எதை? உயிர் உடம்பை நீங்கிய பின் உயிரற்ற உடம்பைக் காண திருவிழா கூட்டம் போல் கூடி இறுதிச் சடங்கிற்காக நதிக்கரையில், மயான பூமியில் உற்றார் உறவினர் இருப்பர் பொங்கின் திந்நாளும், சித்திரைத் திருநாளும் நதிக் கரையில் நடப்பது போல் இறுதி சடங்கு எனும் ஸெத்துலா திந்நாளும் நதிக்கரையில் தானே நடக்கின்றது. எனவே இது ஒரு வகையில் திந்நாள் தான். திரு நாள் என்ற தமிழ்சொல் 'திந்நாள்' என்ற சௌராஷ்டிரமாக மாறியுள்ளது. இத்தகைய ஸெத்துலா திந்நாள் வைபவத்தை மனிதர்கள் தினம் தினம் பார்க்கின்றனர். ஆயினும் அவர்கட்கு தாங்களும் ஒரு

நாளைக்கு அவ்வாறே ஆக்கப்படுவோம் என்று சிறிது கூட எண்ணுவதில்லை. இதைத் தான் ஸ்வாமிகள் 'துமிஸாரியா நிஹா'? நீங்கள் பார்ப்பதில்லையா? என்று குறிப்பிடுகின்றார். ஒரு முறை அல்ல, இரு முறையல்ல, மும்முறை கேட்கின்றார். ஒரு நாள் இவ்வுடம்பை விட்டு உயிர் பிரிவது உறுதி, இது நிரந்தரமானதல்ல, நிரந்தரமான மோட்ச பதவியை அடைய வழித் தேடிக் கொள்ளுங்கள். இந்நாமாவளியில் 3,4 அடிகளில் ஸ்வாமிகள் அதற்கு வழியும் கூறுகின்றார். உன் மனதை ஸ்ரீராம சரணத்தில் நிலை நிறுத்திக் கொள்வாயாக. உன்னை பகவான் ஓம்காரமாகிய பிரணவ ரதத்தில் ஏற்றி அழைத்து செல்வான் என்கின்றார்.

மேலும் ஆசார்யர் கூறுகின்றார்.

பாபுகு த[4]க்கி புந்நுகு வெக்கி ஸ்ரீ
பா[3]லகோ[3]பாலுக் க[3]வஸ்த ஸிக்கி
பா[4]க்கி[3] பா[4]க்கி பரமபத[3]மூஸ் பா[4]க்கி[3]

பாவங்கட்கு பயப்படு. பாவம் செய்யாதே. புண்ணியத்தைத் தேடிக் கொள். ஸ்ரீ பால கோபாலனான ஸ்ரீ கிருஷ்ணனைப் பாட கற்றுக் கொள். அதனால் உனக்கு பரமபதமான மோட்ச பதவி கிடைக்கும். அது ஒன்றே பெரும் பாக்கியமாகும். பா[4]க்கி என்று மும்முறை குறிப்பிடுவதினின்று அதன் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ நாயகி ஸ்வாமிகட்கு பெற்றோர் இட்ட பெயர் ராமபத்ரர் என்பதாகும். பின்னர் ராஜயோகம் பயின்றபோது குருநாதரான நாகலிங்க அடிகளார் ஸ்வாமிகட்கு இட்டபெயர் ஸதானந்தர் என்பதாகும். பின்பு வட பத்ரார்யரிடம் வைஷ்ணவ தீட்சை பெற்று அவர் சிஷ்யரான போது அவரால் இடப்பட்ட பெயர் நடனகோபால் என்பது. இறுதியாக இப்பெயரே இவருக்கு நிலைத்தது. அவரது புகழைப் பாடிக் கொண்டிருக்கின்றது. இன்று ஸௌராஷ்டிர மொழியின் மேன்மையை இவரது இப்பெயர் உலகுக்கு எடுத்துக்காட்டி வருகின்றது. இத்தகைய சிறப்பு மிக்க இப்பெயரால் தொடங்கி பகவானைப் பாடி இவர் பாடியுள்ள நாமாவளியை பார்ப்போம்.

நடனகோ[3]பால் நமம் படன கரோ ஏ
நரகு[3]பா[3]த ஸொடி[3] ஜவாய் ஜவாய் அம்ரெ
வடபத்ரார்யுனு வாட் சலேத் தென்
வைகுண்டுமு ஜெய்கிநு ர:வாய் ர:வாய்.

நடனகோபாலனின் நாமத்தை படனம் செய்யுங்கள். பிறவிப்பிணி என்னும் நரக வேதனையினின்று விடுபட ஒரே வழி இதுதான். நமது

ஆசார்யரான வடபத்ரார்யர் வழி நடந்து பகவானை வழிப்பட்டால் மோட்ச பதவியான வைகுண்ட பதவியை அடைவதற்கும் வழி இதுவே தான். எனவே, நடனகோபாலனான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை வழிபடுங்கள். பூஜை செய்யுங்கள். தினம் மறவாமல் துதியுங்கள் என்கிறார் நாயகி ஸ்வாமிகள்.

எண்ணத்தை இறைவன் பால் திருப்ப பகவானின் நாம உச்சாடனம் என்னும் அப்பியாசம் முக்கியமானது. இதையே பகவான் கீதையில் அப்பியாச யோகத்தால் தன்னை அடையலாம் என்று கூறியுள்ளார். (அத்12/9) நாயகி ஸ்வாமிகள் கூறுவது போல் எப்பொழுதும் பகவான் நாமத்தை உச்சரிக்க, உச்சரிக்க அவன் நினைவாக ஆவோம். பேரின்ப நிலையை எய்தலாம்.

ஹுடிநசொ ஹுடிநசொ ஹொடிம் ஹாத் தகு$^{3}$வேன்
நடனகோ$^{3}$பாலுக் ஹுடி பாய்ம்பொடு$^{3}$ வேன்

ஸௌராஷ்ட்ர குல மணியான ஸ்ரீமந் நடனகோபாலநாயகி ஸ்வாமிகள் எளிய நடையில் பாமரனும் புரிந்து கொள்ளும் முறையில் சாதாரண உவமை நயத்தோடு உயர்ந்த விஷயங்களை புரிய வைப்பதில் வல்லவர் ஸௌராஷ்ட்ர மொழியிலும், தமிழிலும் அவர் பாடியுள்ள கிருதிகளைப் படித்துப் பார்த்தால் ஸ்வாமிகளின் இத்திறனை நாம் அறியலாம். சான்றுக்கு இங்கு ஒரு நாமாவளிப் பாடலைப் பார்ப்போம்.

பா$^{4}$த் உன்னபொடெ$^{3}$த் ஆங்கு$^{3}$
ப$^{3}$லம் உ ட்$^{3}$க$^{3}$யி ஹரி ப$^{4}$க்தி நீ:ஜியெத்
க்$^{3}$யான் கா$^{2}$ல் பொட$^{3}$யி ஆத்ம
க்$^{3}$யான் மென்தொ காய்நாமெனெதி
மோக்ஷிம் ஹட்வன் தொ$^{2}$வ்னாஜியெத்
ஜெலும் ஜுட$^{3}$யி ஜெலும் ஜுட$^{3}$யி பி$^{2}$ர்
ஜெலும் ஜுட$^{3}$யி யேஸ் கெ$^{3}$திகரா:யி

முதல் மூன்று அடிகளை நோக்குங்கள். சாதம் (உண்பது) குறைந்தால் உடம்பின் பலம் குறையும். ஹரி பக்தி இல்லையெனில் அறிவு நம்மிடமிருந்து (அகன்று) கீழே விழுந்து விடும் என்கிறார் ஸ்வாமிகள். நம் உடம்பிற்கு தேவையான உணவை உண்ணாவிடில் உடம்பின் பலம் குறையுமென்பது அனைவரும் அறிந்த எளிய விஷயமாகும். அதையே உவமையாக கொண்டு ஹரிபக்தி இல்லையெனில் ஆன்ம அறிவு நம்மிடமிருந்து அகன்று கீழே விழுந்துவிடும் என்கிறார். அதாவது பகவானைப் பற்றிய ஆன்ம அறிவு நம்மிடமிருந்து நீங்கி விடும் என்கின்றார் நம் ஆசார்யர்.

ஸௌராஷ்ட்ர மொழிப் புலவரான ஸ்வாமிகள் தொடர்ந்து என்ன

கூறுகிறார்? ஆன்ம அறிவு என்பது என்னவெனில் மோட்சத்தை அடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு பக்தி செய்வதேயாகும் என்கின்றார். இவ்வளவு தானா என்று எண்ணலாம். மோட்சம் பெறுவதற்கான வழி வகைகளை ஆராய்ந்து அவற்றைக் கடை பிடிக்க வேண்டும். மனித பிறவி எடுத்ததின் லட்சியமே அது தான். அவ்வாறன்றி மோட்சத்தில் எண்ணம் வைக்காதவர் அடையும் நிலை என்ன? அதையும் ஸௌராஷ்ட்ர ஜோதி கூறிவிடுகின்றார். என்ன? ஜெலும் ஜூட$^3$யி ஜெலும் ஜூட$^3$யி -- பிறப்பு சூழும் பிறப்பு சூழும் என்கின்றார். அதற்குப் பின் நரக் ஜூட$^3$யி நரக் ஜூடயி அதாவது நரகம் சூழும் நரகம் சூழும் என்கின்றார். அதற்குப் பிறகும் பிறப்பு சூழும். இவ்வாறு பிறப்பும் நரகமும் மாறி மாறி திரும்பத் திரும்ப நமக்கு வாய்க்கும் என்கிறார். இதை யாராவது விரும்புவார்களா? இதனின்று விடுபட ஒரே வழி பகவானின் மலரடிகளைப் பற்றுவதே. ஹரி பக்தி செய்வதேயாகும்.

மேலும் ஹரிநாம ஸங்கீர்த்தனத்தைப் பற்றி தமிழ் நாமாவளியில் ஆசார்யர் கூறுகின்றார்.

ஹரி நாம ஸங்கீர்த்தனம்
பெரியோர்கள் தம் கை தனம்
ஹரி நாம ஸங்கீர்த்தனம்
சிறியோர்கள் அறியார் இனம்
நெறி அறிபவர் இரு வினை தீரும்
ஹரி நாம ஸங்கீர்த்தனமே.

பெரியோர்களின் கையிலுள்ள பெருஞ்செல்வமாக விளங்குவது ஹரி நாம ஸங்கீர்த்தனமாகும். ஹரி நாம சங்கீர்த்தனத்தின் பெருமையை சிறியவர்கள் அறிய மாட்டார்கள். சங்கீர்த்தன நெறியை அறிபவர்கட்கு பிறப்பு, இறப்பு என்ற இரு வினைகளும் தீரும் என்கிறார்.

இன்று ப$^4$ாஷா ப$^4$ ப$^4$க்தியைப் பற்றி நாம் பரவலாக பேசி வருகிறோம். பா$^4$ஷா பக்தியின் அவசியத்தை பற்றி பிரசாரம் செய்கிறோம். தனது கிருதிகளினால் ஸௌராஷ்டிர மொழியின் சிறப்பை உலகிற்கு உணர்த்தியுள்ள ஸ்ரீமந் நடன கோபால நாயகி சுவாமிகள் மொழிப் பற்றினைக் குறித்து தனது நாமாவளி ஒன்றில் வெகு அழகாகவும், நயமாகவும் நமக்கு எடுத்துக் கூறியுள்ளார். அந்நாமாவளியைப் பார்ப்போம்.

பா$^4$ஷா ப$^4$க்தி நீ:ஸ்தெநொ பா$^4$த் நீ:ஸ்தெ பொ$^4$ந்நொ
நித்ய முக்தி பொந்த்$^3$யாஸ் தெங்கொ காய் உந்நொ
ஸெத்து தொப்பி சலெஸ்தெநொ பெ$^4$ட$^3$ செந்நொ
ஸித்$^3$து$^3$ லுவாட் சலெஸ்தொநொ உக்கு செந்நொ.

நாமாவளியே பாஷா பக்தியில் தொடங்குகிறது. மொழிப் பற்றில்லாதவனை சோறிலா வெற்றுப்பானை என்கிறார் ஸ்வாமிகள். நயமான உவமானத்துடன் எடுத்துரைக்கின்றார். தாய்மொழிப் பற்றில்லாதவர்களை இடித்துரைக்கின்றார். சோற்றுப்பானையில் சோறு இருந்தால் தானே பானைக்கு மதிப்பு. அதே போல் முழு மனிதனாயின் அவனுக்கு தாய் மொழிப்பற்று இருக்க வேண்டும். மொழிப் பற்றில்லாதவன் வீணன்தான். அவன் முழு மனிதனாகான். எப்படி சோறில்லா வெற்றுப்பானை சோற்றுப் பானையாகாதோ அதே போல் தாய் மொழிப் பற்றில்லாதவன் முழு மனிதனாகான்.

மேலும் ஸௌராஷ்டிர மஹறிஷி கூறுகின்றார் பகவத் பக்தி புரிந்து நித்யமான முக்தியை பெற்றவர்கட்கு என்ன குறைவு ? ஒரு குறைவும் இல்லை. குறைவற்ற முக்திக்கு வழி வகுப்பது இறை பக்தியாகும். பக்தி செய்து முக்தி பெற்றவர்கட்கு எவ்வித குறையும் இல்லை என்கிறார் சுவாமிகள்.

மூன்றாவது அடியில் ஸௌராட்டிராசார்யர் கூறுவது என்ன? சத்திய நெறி தவறி நடப்பவர்கள் உடைந்த சுண்டக்கடலையான பொட்டுக் கடலைப் போன்றவர்கள். அதாவது சுண்டக்கடலை முழுமையானது. அதை உடைத்து இரு கூறாக்கப்பட்டு பொட்டுக்கடலையாகிறது. அதாவது முழுமை நிலை நீங்கி அரை வடிவம் பெறுகின்றது. அதே போன்று சத்தியநெறி தவறுபவர்கள் முழு மனிதனாக மாட்டார்கள். அரை மனிதன் தான் என்ற பொருள் கொள்ளலாம்.

இறுதி அடியில் சுவாமிகள் சித்தர்கள் வழி நடப்பவர்கள் முழுமை வடிவமுடைய சுண்டக்கடலை போன்றவர்கள் என்கிறார் நாயகி சுவாமிகள். முதன் முதலில் ராஜயோகத்தை நாகலிங்க அடிகள் என்ற சித்தரிடம் பயின்றார். நாயகி சுவாமிகளும் ஒரு சித்தரே. நடன கோபால நாயகி என்ற பெயருக்கு முன் ஸதாநந்த சித்தர் என்ற பெயர் நாயகி சுவாமிகட்கு இருந்து வந்தது. சித்தர் வழியைப் பின்பற்றி பக்தி யோகத்தை அனுஷ்டிக்க வேண்டும். அவ்வாறு பின்பற்றி நடப்பவர்கள் முழுமையானவர்கள் ஆவார்கள் என்கிறார் ஸௌராஷ்டிர மஹாகவி.

இந்நாமாவளியில் செந்நொ ( சுண்டக்கடலை பொட்டுக்கடலை) சுவாமிகள் உவமானமாகக் காட்டியுள்ளார். அரிய கருத்துக்களை எளிய உதாரணங்களால் கூறும் பாங்கு போற்றத்தக்கது. மேலும் செந்நொ அன்றாடம் நாம் உபயோகிக்கும் ஓர் உணவு பொருளாகும். அதை

உதாரணமாக எடுத்துக் கூறியதால் வெகு எளிதில் நம் மனதில் சுவாமிகள் கூற வந்த கருத்து படிந்து விட்டதல்லவா? அதற்காக தான் ஸ்வாமிகள் இத்தகைய ஓர் உத்தியை கையாண்டார் போலும்.

இன்று நம் ஸௌராஷ்டிர மொழி பெருமளவில் வளர்ச்சியடைய வேண்டியிருக்கிறது. மற்ற வளர்ச்சியடைந்த மொழிகளோடு நம் தாய் மொழியை ஒப்பு நோக்கின் நம் தாய் மொழியின் வளர்ச்சி மிகவும் குறுகியது. எனவே பாஷா பக்தியின் அவசியத்தை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். சமூக ஸ்தாபனங்கள் மட்டும் மொழியின் வளர்ச்சியைப் பற்றி கவனிப்பார்கள் என்று எவரும் எண்ணலாகாது. சமூகத்தில் தனி மனிதனும் தாய் மொழியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயல்பட வேண்டும். மொழிப் பற்றில்லாதவர்களை சோறில்லா வெற்றுப்பானை என்று சாடுகின்றார் ஸ்வாமிகள். எனவே நாம் உணர்வுமிக்கோராகி பாஷா பக்தியுள்ளவராக மாறி, தாய் மொழி வளர்ச்சியில் பங்கு ஏற்று ஸ்வாமிகள் அறிவுரைப்படி நடந்து தாய் மொழியை வளர்ப்போமாக!.

பாஷா பக்தியின் அவசியத்தை எடுத்துரைத்த நாயகி ஸ்வாமிகள் பகவத் பக்தியைப் பற்றி எடுத்துக் கூறுகின்றார். நம் உள்ளத்தில் பகவத் பக்தி உணர்வு பூர்வமாக அமைவதற்கு ஒரு சிறந்த வழியை நமக்கு காண்பிக்கின்றார். அது என்னவென்பதை பார்ப்போம். இதோ ஸ்வாமிகளின் நாமாவளிப் பாடல்

ஹந்தெ³ ஹந்தெ³ தா⁴நுகஸ்கி ஹரிக்
ஹாத் தெ³க்கட³ஸ் தெநொ
பொந்த³ய் பொந்த³ய் புஜா போ²ளுந் ---த்யே
அந்தி³ லெத் ஜாய் அஸ்கி மூளுந்
கோ³விந்தா³ மெநொ அஸ்கி வேளும்
கோ³பாலா மெநொ அஸ்கி வேளும்
நிச்சு நிச்சு ஹுமன்னொ ஹுமன்னொ
ஹந்தெ³ ஹந்தெ³ தா⁴நுகஸ்கி ஹரிக்

நாம் வீட்டில் தினமும் சமைத்து உண்கிறோம். உணவை சமைத்தவுடன் அதை உண்பதற்கு முன் ஒரு சிறு காரியத்தை செய்யும்படி நாயகி ஸ்வாமிகள் வேண்டுகிறார். அது என்னவெனில் சமைத்த உணவை பகவானுக்கு அவன் திருக்கரங்கட்கு காட்டி பின் அருந்துமாறு வேண்டுகிறார். நாம் உண்ணப்போகும் உணவினை நமக்கு அளித்தவன் ஸ்ரீஹரி, உணவை நமக்களித்த அவனுக்கு சமைத்த உணவை அப்பா! பரமாத்மா! இவ்வுணவை

நீயே தான் கொடுத்தாய். இதை உனக்கு சமர்ப்பணம் செய்கிறேன். இன்று போல் என்றும் எனக்கு இவ்வாறு உணவளிப்பாய் என்று வேண்டி உணவினை புசிக்க வேண்டும். பகவானுக்கு காண்பிக்காமல் உண்பது திருடுவது போலாகும் என்று காஞ்சி பீடாதிபதி சங்கராச்சாரியார் நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு செய்வதால் ஏதாவது பலனுண்டா? அதற்கும் சுவாமிகள் பதில் கூறியுள்ளார். தெநொ பொந்தய் பொந்தய் புஜா போளுந் என்கிறார். அதாவது அவ்வாறு பகவானுக்கு காண்பித்து உண்பவர் பூஜிக்கத் தகுந்தவர்களாக ஆவார்கள். பெரும் பேற்றினை அடைவார்கள். நற்பேறு பெறுவார்கள் என்கிறார். மேலும் நாம் இவ்விதம் செய்வதால் உணவோடு பக்தி உணர்வினையையும் ஊட்டுகிறோம். எனவே இயல்பாகவே நம் உள்ளத்தில் பக்தி அமையும். பக்தி உள்ளத்தில் குடிகொண்டுவிட்டால் அப்புறம் எல்லாம் ஆனந்தமயம் தான்.

மேலும் ஸௌராஷ்ட்ர ஆசார்யர் கூறுகின்றார். த்யே அந்தி3லெத் ஜாய் அஸ்கி மூளுந்---அதை எட்டிக் கொண்டால் ( பற்றினால் ) எல்லா வேரும் போகும் --- அதாவது பக்தியைப் பற்றிக் கொண்டால் பிறப்பிறப்பாகிய வேர் அறுந்து போகும் என்கிறார் தேவுன். த்யே அந்தி3 லெத் ஜாய் அஸ்கி மூளுந் '' அதை எட்டினால் போகும் எல்லா வேரும் '' என்பதை இப்படியும் சொல்லாமோ என்று தோன்றுகிறது. த்யே அந்தி லெத்ஜாய் அஸ்கி மூளுந் --- அது பற்றிக் கொண்டு போகும் எல்லா வேரையும் என்றும் பொருள் படுத்தலாம். அதாவது பக்தியுணர்வு நம்மைப் பற்றி பிறப்பிறப்பாகிய வேரினை நம்மிடமிருந்து அறுத்துக் கொண்டு போகும் என்று கூறலாம். எவ்வாறாயினும் பிறப்பு, இறப்பு துன்பம் நீங்க பகவத் பக்தி மிகவும் அவசியம் என்பதை சுவாமிகள் வலியுறுத்துகின்றார்.

தொடர்ந்து சுவாமிகள் சொல்கிறார் கோவிந்தா என்று எப்பொழுதும் கூறுங்கள். கோபாலா என்று எப்பொழுதும் சொல்லுங்கள் இப்படிச் சொல்லியுள்ளார். நமக்கெங்கே எப்பொழுதும் பகவான் நாமத்தைச் சொல்ல நேரமிருக்கிறது. அவன் நாமத்தை உச்சரிக்கவே நமக்கு நேரமாகும். ஆதலால் முடிந்த நேரங்களிலாவது அவன் நாமத்தை உச்சரிப்போமாக!.

இன்னொன்றையும் குறிப்பிடுகிறார். நிச்சு நிச்சு ஹுன்னோ ஹுன்னோ அதாவது தினம் தினம் சுடச்சுட பகவானுக்கு காட்டிவிட்டு உணவினை உண்ணுமாறு கூறிய ஸ்வாமிகள் அதை தினமும் செய்ய வேண்டும் என்கிறார். அது மட்டுமல்ல சுடச்சுட என்கிறார். உணவினை

சமைத்தவுடன் சுடச்சுட பகவானுக்கு காட்டுமாறு ஆசார்யர் சொல்கிறார். எனவே சுவாமிகள் உபதேசித்துள்ள நல்லுரையை நாம் கடைபிடித்து உய்ய வேண்டும். இதில் நமக்கு எவ்வித சிரமும் இல்லை. செலவும் கிடையாது. எனவே எவரும் கடைபிடிக்கலாம்.

ஸௌராஷ்டிராசார்யரான ஸ்ரீமத் நடனகோபால நாயகி ஸ்வாமிகள் தமது நாமாவளிப் பாடலில் தொடர்ந்து கூறும் கருத்துகளைப் பார்ப்போம்.

கௌ³நிம் ஸேஸ்தெ ஸுக²மு லௌநிம் ஜாஸ்தெ ஹகு³மு
ஸெரிர் க²ட ஸ்தெ து³க்குமு பி²ரி அவ்நா மொ காமு
மோக்ஷி மொர் தா²மு ஸாக்ஷி ஹரி ராமு

கெ³ளநிம் ஸேஸ்தே ஸுக²மு அதாவது பாடுவதிலுள்ள சுகம் என்கிறார் பாடுவதில் உள்ள சுகமா? அதுவென்ன, இறைவனை பாடுவதில் உள்ள சுகத்தை குறிப்பிடுகின்றார் சுவாமிகள். இறைவனை பற்றி இனிய குரலில் பாடினால் அதில் கிடைக்கும் சுகமே தனி. சுயநலமற்று பாடுவதில் பெரும் இன்பம் பெறலாம். நாயகி சுவாமிகள் தான் கூறியபடி காலமெல்லாம் கண்ணனைப் பாடி அதைப் பெருஞ்சுகமாக அனுபவித்தவர். எனவே தான் பாடுவதிலுள்ள சுகம் என்று பகவானைப் பாடுவதிலுள்ள இன்பத்தைக் குறிப்பிடுகின்றார் சுவாமிகள்.

பின், 'லௌநிம் ஜாஸ்தெ ஹகமு' அதாவது இடுவதில் போகும் அகங்காரம் என்று கூறுகின்றார். எதை இடுவதில்? நெற்றிக் குறி இடுவதில் அகங்காரம் என்ற எண்ணம் போகும் என்கிறார். திருமண், கோபி சந்தனம், திருநீறு முதலியவற்றை நெற்றியில் மதக் குறிகளாக இட்டுக் கொள்கிறோம். இதில் உள்ள தத்துவம் என்ன? திருமண்ணும் கோபி சந்தனமும் மண்ணாகும் அதை தினமும் நெற்றியில் பகவான் நாமத்தை உச்சரித்துக் கொண்டே இட வேண்டும். அதன் தத்துவமாவது இந்த மண்ணைப் போன்று இந்த உடம்பும் ஒரு நாள் மண்ணோடு மண்ணாகப் போகின்றது. எனவே எப்பொழுதும் நல்லதையே நினைத்து நல்லதையே செய்ய வேண்டும். மண்ணாகப் போகவிருக்கும் இவ்வுடம்பிற்காக இழி செயல்களைச் செய்வது பாவம். தூய மனத்தினை அருள்வாய் என்று பகவானை பிரார்த்தித்து, எண்ணி நெற்றியில் குறி இடுதல் வேண்டும். திருநீறு என்பது சாம்பலாகும். இவ்வுடம்பை இறந்த பின் எரிப்பர். மிஞ்சுவது சாம்பல் தான் அதை நினைவூட்டுவது திருநீறு. திருநீறு இடும்போது இவ்வுடல் ஒரு நாள் எரிந்து சாம்பலாகவிருக்கின்றது. அக்காலத்திற்குள் பிறருக்கு நன்மையையே

செய்ய வேண்டும் என எண்ணி நீறு இட வேண்டும். இதுவே நெற்றிக் குறியிடுவதின் தத்துவமாகும்.

திரும்பத் திரும்ப பிறப்பெடுத்தலால் வரும் பயன் என்ன? வெறும் துக்கமே, எனவே அதை தவிர்க்க வேண்டும். அதற்கு வழி என்ன? பிறப்பெடுத்தல் என்ற வேலை இல்லாமல் செய்ய என்ன செய்ய வேண்டும்? பி2ரி அவ்நா மொ காமு திரும்ப வராது எனக்குவேலை என்கிறார். பிறப்பெடுத்தல் என்ற வேலையைத் தான் சுவாமிகள் குறிப்பிடுகின்றார். அதற்கு வழி தான் முதலில் கூறியது. அதாவது இறைவனைப் பாடி சுகமாக இருப்பது. நெற்றிக் குறியிட்டு அகந்தையை அழிப்பது இதன் மூலம் மோட்சம் அடையலாம் என்பதைத் தான் ஸௌராஷ்ட்ர ஆழ்வார் 'மோக்ஷி மொர் த2ாமு' (மோட்சம் என் இடம்) என்று குறிப்பிட்டுள்ளார். பகவானைப் பாடியவருக்கு மோட்ச கதியுண்டு என்று சுவாமிகள் குறிப்பிடுகின்றார். இறுதியில் 'ஸாக்ஷி ஹரி ராமு' என்று குறிப்பிட்டுள்ளார். மோட்சம் கிடைக்குமா என்று சந்தேகம் கொள்ள வேண்டா. நான் கூறியதற்கு இதோ சாட்சி ஸ்ரீஹரி ராமன் என்று கூறுகிறார் ஸௌராஷ்ட்ர ஜகத்குரு.

ஆசார்யரின் அருளுரைப்படி பகவானைப் பாடி, பேரின்பம் பெற வேண்டியது அவசியமாகும். இன்று பெரும்பாலோர் நெற்றிக் குறியிடுவதை தவிர்க்கின்றனர். ஒவ்வொரு ஹிந்தும் நெற்றிக் குறியிடுவதைத் தமது தினக் கடமைகளில் ஒன்றாகக் கொள்ள வேண்டும். தம்தம் மதாசாரப்படி குறியிட்டு கொள்ளலாம். சுவாமிகள் உபதேசப்படி நாம் அனைவரும் நெற்றிக் குறியிடுவதன் மூலம் அகந்தை அற்றவர்களாக விளங்குவோமாக.

ஹிந்தியில் சூர்தாஸர் கண்ணனைப்பாடி எவ்விதம் முக்தி பெற்றாரோ அதே போன்று சௌராஷ்டிர மொழியில் சதா காலமும் கண்ணனைப்பாடி பேரின்ப நிலையான முக்தி நிலையை அடைந்தவர் ஸ்ரீமந் நடனகோபாலநாயகி சுவாமிகள். இவரது நாமாவளியில் அரிய கருத்துக்கள் அடங்கியுள்ளன. பாமரரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்தவை இவரது நாமாவளிப் பாடல்களாகும். தொடர்ந்து நாமாவளிப் பாடலைப் பார்ப்போம்.

ராமகிருஷ்ணா நமம்ஹாத் தெ4ல்லெ எமஜொவளவ்னா
ராமகிருஷ்ணா ஹரிமெல்லெ ராதி தீ3ஸூம்
த்4யான்கர்லே பாமருன் ஸெங்கு3 தூ ஹெளளே
ப4க்திகர்னார் ஸெரமிள்ளெ.

எமன் உங்களை நெருங்கக் கூடாது என்று எண்ணுகின்றீர்களா? அப்படியானால் ராமாகிருஷ்ணா என்று பகவானைப் பூஜியுங்கள். எமன் அருகில் வரமாட்டானே. மேலும் சுவாமிகள் கூறுகிறார். ராதி$^3$தீ$^3$ஸூம் — இரவு பகல் எந்நேரமும் ஹரி என்று சொல்வாயாக என்கிறார். சுவாமிகள் கூறியுள்ளதை வைத்து எந்நேரமும் ஹரி என்று கூறிக் கொண்டிருந்தால்மற்ற வேலைகளைச் செய்ய வேண்டாமா என்று கேட்கத் தோன்றும். பணிகளுக்கிடையில் தான் பகவான் நாமத்தை உச்சரிக்கச் சொல்கிறார்.

மேலும் பகவத் தியானம் செய்வாயாக என்கிறார். தியானம் செய்வதால் மனமும், உடலும் நலமடைகின்றது. எனவே மனிதனுக்குத் தியான பயிற்சி மிகுந்த நன்மை அளிக்க வல்ல சாதனமாகும்.

இறுதியாக 'பாமருன் ஸெங்கு$^3$ தூ ஹெள்ளே ப$^4$க்திகர்னார் ஸெரமிள்ளெ' அதாவது பக்தியற்ற பாமரர்களின் சிநேகிதத்தை நீக்குவாயாக. பக்திமான்களாகிய அன்பர்களின் நட்டைப் பெற்று அவர்களோடு கலப்பாயாக என்கிறார். தூய பக்தனாக விளங்க பக்தர்களின் நட்பை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். உள்ளத்தில் பக்தியில்லாதவர்களின் நட்பை நாம் துறந்து விட வேண்டும் என்கிறார் சுவாமிகள்.

நம் மனதிற்கு துணைவன் யார் தெரியுமா? பகவான் பரந்தாமன் ஸ்ரீரங்கநாதன் தான் என்கிறார் அடுத்த நாமாவளியில்

ஸெங்கு$^3$ கோன் தொகொ$^3$ மொந்து ரி:யேத்
ஸங்கி$^3$ ஸங்கி$^3$ ஸங்கி$^3$
ஸ்ரீரெங்கா$^3$ தே$^3$வ்வினா ஸெங்கு$^3$ தெனோஸ்
ஸெங்கு$^3$ ஸெங்கு$^3$ ஸெங்கு$^3$

மனமே! உனக்கு துணைவன் ஸ்ரீரெங்கநாதனைத் தவிர வேறு யாராவது இருந்தால் சொல் என்று மனதை விளித்துக் கேட்கின்றார். மனதிடமிருந்து இல்லையென்று சுவாமிகட்கு பதில் கிடைக்கின்றது. அவர்தான் உனக்கு துணை என்று திரும்ப மனதை நோக்கி கூறுகின்றார். மனதை நோக்கி கூறுவதாக அமைந்த இந்நாமாவளியின் மூலம் ஸ்ரீரங்கநாதன் தான் துணை என்று நமக்கு அறிவுறுத்துகின்றார். நம் அனைவருக்கும் துணைவன் ஸ்ரீரங்கநாதனான பரமாத்மா என்கிறார் சுவாமிகள். மேலும் கூறுகின்றார்.

ஸ்ரீதே³ வூஸ் தே³வ் ஸொண்ணொ கொ மொந்நு
மூதே³ வின்ஸொர மின்னோகொ மொந்நு.

ஸ்ரீ: யப்பதியான மஹாவிஷ்ணு தான் மேலான கடவுள். அவரைப் பற்றிக் கொள். அவனை விடாதே மனமே! மூதேவிகளோடு, மூதேவி குணம் கொண்டவர்களோடு கலக்காதே என எச்சரிக்கின்றார்.

இன்றைய உலகில் சிலர் பயனற்று பேசுவதை, பேசிக் கொண்டிருப்பதை பெரும் பொழுதுபோக்காக கொண்டிருப்பதை பிரத்யட்சமாக நாம் காணலாம். அதில் ஏதும் பயன் இல்லாவிடினும் அதை வழக்கமாக கொண்டுள்ளனர். அதைக் குறித்து வருந்தி பாடியுள்ளார் நாயகி சுவாமிகள் அந்நாமாவளியைப் பார்ப்போம்.

ரித்த வத்தாம் காய் கு³ண்ணு
பி⁴த்தர் ஹட்வி ஸியேத் புந்நு
ர:த்தவாட் சலெதீஸ் கு³ண்ணு
ராத் தீ³ஸ் ஹரிஹோர் மொந்நு.

வெறும் பேச்சில் என்ன குணம் உள்ளது என்கிறார். சிலர் காலம் முழுவதும் வெறும் பேச்சிலேயே வாழ்க்கையை கழித்து விடுகின்றனர். வெறும் பேச்சினால் என்ன பயனுள்ளது? ஒன்றுமில்லை. பயனற்ற பேச்சினை விட்டுவிடுங்கள். அதற்கு மாறாக 'உள்ளே எண்ணிப் பார்த்தால் புண்ணியம்', என்கிறார். அதாவது மனதினுள் இறைவனைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். மனதால் இறைவனைத் தொழ வேண்டும். மனதில் இறைவனை இருத்தி தியானிக்க வேண்டும். அப்பொழுது புண்ணியம் உனக்கு மிகவும் உண்டு என்கிறார் சுவாமிகள். மேலும் சொல்கிறார் நேர் வழியில் நடப்பது தான் குணமாகும். அதாவது நேர்வழியில் நடப்பது தான் உயர்ந்த குணமாகும். சிறந்த நெறியுமாகும். அதை விடுத்து குறுக்குவழியில் செய்கைகளை அமைத்துக் கொள்வது சரியல்ல என்கிறார். சலெதீஸ் (நடந்தால் தான்) என்று அழுத்தமாக கூறுகின்றார்கள் சுவாமிகள். எனவே நாம் அனைவரும் நேர்மை குணம் படைத்தவர்களாகவும் நேரிய வழியில் நடப்பவர்களாகவும் விளங்குதல் மிக்க அவசியமாகும். இறுதியாக சொல்கிறார். 'இரவும் பகலும் ஹரியின் மீது மனம்' என்கிறார். அதாவது சுவாமிகள் ஸதா ஹரியான பகவானை தனது மனத்திலேயே வைத்து பூஜித்து வந்தார். அதைத்தான் ஆசார்யர் 'ராத்தீஸ் ஹரிஹோர் மொந்நு' என்று குறிப்பிடுகின்றார்.

இரவும் பகலும் ஹரியின் மீது மனம் வைத்ததாக குறிப்பிட்ட ஸ்வாமிகள் அந்த ஹரியிடமே ஒரு வேண்டுகோள் விடுகின்றார். அழகுத் தமிழில் பாடியுள்ள அந்நாமாவளிதான் பின்வரும் பாடல்.

ஹரியேயுனைப் பிரியா வண்ணம்
அருளாயிதுவே எனதெண்ணம்
ஹரி ஹரி ஹரி ஹரி.

ஸ்வாமிகள் தனது எண்ணத்தை ஹரியிடம் தெரிவிக்கின்றார் என்ன? ஹரி! உன்னைப் பிரிந்து கணநேரம் கூட என்னால் இருக்க முடியாது. எனவே உன்னைப் பிரிந்து விடாமலிருக்க எனக்கு அருள்புரிவாய். இதுவே என் எண்ணமாகும். வேண்டுகோளாகும் என்று கேட்டுக் கொள்கிறார். ஹரி என்ற அந்த இரு எழுத்துகளுக்குத் தான் என்ன சக்தி!

பின்வரும் ஈரடி நாமாவளிப் பாடல் மிகவும் அழகானது. விசேஷமானது. அது என்னவென்பதைப் பார்ப்போம்.

கேஸவ மாத$^4$வ ஸீதாராம்
கெ$^3$ங்கா$^3$ துளஸி ஸாலக்$^3$ ராம்

முதலடியில் அமைந்த கேஸவ, மாதவ, ஸீதாராம் பகவானின் திருப் பெயர்கள் என்பதை நாமறிவோம். 2வது அடியில் அமைந்த கெ$^3$ங்கா, துளஸி, ஸாலக்ராம் பகவான் விஷ்ணு சொரூபமானவை. பிரியமானவைகளாகும். கங்கை நதி பாரத தேசததின் ஏழு புண்ணி நதிகளில் முதன்மையானது. அது விஷ்ணுவின் அம்சமாக போற்றப்படுகின்றது. பஜகோவிந்தத்தில் ஆதிசங்கராச்சாரியாரும் கங்கையின் சிறப்பை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ப$^4$க$^3$வத் கீ$^3$தா கிஞ்சித் அத்ஹீதா
, கங்கா$^3$ ஜலலவ கணிகா பீதா
ஸக்ருதபி யேன முராரி ஸமர்ச்சா
க்ரியதே தஸ்ய யமேன நசர்ச்சா.

சிறு அளவேனும் பகவத் கீதை ஓதி, ஒரு துளியேனும் கங்கை நீர் அருந்தி, ஒரு கணமேனும் எப்போதேனும் திருமாலை வழிப்பட்டிருந்தாயேல் ஒரு வித பேச்சும் வாதமுமில்லை. வரும் யமனுக்குன்னண்டை. அதாவது கங்கை நதியின் ஒரு சிறுதுளி நீர் அருந்தினால் போதும் மரண பயமே வேண்டாம் என்கிறார். அத்தகு சிறப்பு வாய்ந்தது கங்கை நதி. அடுத்து துளசி இலை. துளசியோ ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கு மிகவும் பிரியமானது.

ஸ்ரீ கிருஷ்ண துலாபாரக் கதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை எடைககு எடை பொன் ஆபரணங்கள கொடுத்து நாரதரிடமிருந்து விலைக்கு வாங்க ஸத்யபாமா முயற்சித்த போது இறங்காத பரமாத்மா ருக்மணிதேவி அன்புடன் ஒரு துளசிதளம் தராசில் வைத்த போது இறங்கினார். துளசிக்கு அத்தகையதொரு சிறப்பை பகவான் அளிததுள்ளார். எனவே பகவானின் பிரியத்திற்குரிய துளசியும் துதிக்கத்தக்கதாகும். இறுதியாக கூறியுள்ள 'ஸாலக்ராம்' ஒரு வகை கருங்கல். கண்ணன் கருமை நிறமுடையவன். ஸாலக்ராம் கருமை நிறமானது. நேபாள தேச கண்டகி நதியில் இன்றும் கிடைக்கிறது. லிங்கம் சிவ ரூபமாக கருதி வணங்குவது போல் ஸாலக்ராம் விஷ்ணு ரூபமாக கருதி வணங்கப்படுகிறது. ஆகவே விஷ்ணு அம்சமான கங்கை, துளசி, ஸாலக்ராம் மூன்றையும் இந்நாமாவளியில் ஸ்வாமிகள் குறிப்பிட்டு அவற்றை வணங்கி போற்றும்படி கூறியுள்ளார். அவற்றைப் போற்றுவது பகவானைப் போற்றுவதற்கு ஒப்பாகும்.

ஸ்ரீமந் நடன கோபாலநாயகி சுவாமிகள் உடம்பின் ஸ்திரமற்ற நிலையை நமக்கு எடுத்துக்கூறி கண்ணனைப்பாடி மகிழுமாறு பின்வரும் பாடலில் உபதேசம் செய்கின்றார். அந்நாமாவளி என்னவென்று பாருங்கள்.

கஜளுவநி ஹரிக் ப⁴ஜனகரோ தும்
நரகும் காம் நீ:ஸ்தக ஜாய் ஜாய்
தெ²ட்கி பொடெ³த் முட்கொ ஹொய் ஜாய்
பு²ட்கொ ஸரீர் ஹட்க கெண்டா⁴ல்
பெ³ட்கொ பெ³ட்கி மெல்லி
அட்கத் ஹப்பள் ஹொவுங்கொ.

கருமை நிறக் கண்ணான ஹரியைப் பூஜிப்பீர். நரகத்தில் நமக்கு வேலையில்லை என்கிறார் நாயகி ஸ்வாமிகள் மேலும் உடம்பின் நிலையாமையை பற்றிக் கூறுகின்றார் எப்படி?. இந்த உடம்பு இருக்கின்றதே, சற்று கால் தடுக்கி விழுந்தால் போதும் 'சப்பை' அடி தான் அவ்வாறு நேரிடுமய்யா. இந்த உடைந்த உடம்பை தோலினால் ஆண், பெண் என்று சொல்லிக் கொண்டு பெருமிதம் கொள்ளாதீர். உடம்பின் நிலையாமையைச் சற்று எண்ணிப் பாருங்கள். பாக்கை வெட்டுவதற்காக 'பாக்கு வெட்டி'யில் பெரும் பாக்கு படும் அவதியைப் போன்று ஏன் வீணாக துன்பப்படுகின்றீர்கள்? நமது துன்பங்கள் அகல, பேரின்பம் பெற பகவானைப் பாடுவீர். பரமானந்தம் பெறலாம் என்கிறார் ஸ்வாமிகள்.

இந்த மனம் இருக்கின்றதே மிகவும் மோசமானது. எவ்வளவு தான்

நல்லுபதேசம் செய்தாலும் கூட மேலான நிலைக்கு செல்ல மாட்டேன் என்கிறதே. நாயகி சுவாமிகளும் விடாமல் மனதுக்கு நல்லுபதேசம் செய்கிறார். அவருக்குக் கூட சலிப்பு ஏற்பட்டு விட்டது. அது நாமாவளியாக வெளியாகின்றது.

அரே மொந்நு தூகரொரி: காமுனஸ்கி
மொரநுஜ்வாவுனுகு ஹொயெஸ்தெ
பு$^2$ரொ தொரஸெர மொகொ பு$_2$ரொ

அட மனமே! நீ செய்கின்ற செயலெல்லாம் பிறப்பு, இறப்புக்கு வழிவகுப்பனவாக உள்ளதே. பிறப்பு, இறப்பு அகன்று மோட்ச பதவியை அடைவதற்கு வழிகளை எத்தனை முறை உனக்கு சொல்லியிருக்கிறேன். கேட்கிறாயா நீ? போதுமப்பா போதும் உன்னோடு, இந்த மனத்தைப் பற்றி பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கூட கீதையில் கூறுகின்றார். மனம் கட்டுப்படாதது. அலையும் தன்மையது என்பதில் ஐயமில்லை. (மநோதுர் நிக்ரஹம் சலம் அஸம்சயம்) ஆனால் அப்பியாசத்தாலும், வைராக்யத்தாலும் அதை அடக்கலாம். இதுவே கீதாசார்யனின் உபதேசம் சாட்சாத் பகவானே மனம் கட்டுப்படாதது, அலையும் தன்மையது என்று கூறும் போது அதற்கு மறுப்பு கூறுவர் உண்டோ பகவானே அதை அடக்க வழியும் கூறுகின்றார் எப்படி? அப்பியாசத்தாலும், வைராக்யத்தாலும் அதை அடக்கலாம் என்கிறார். கீதையில் ஜகத் குருவான கண்ணன் கூறிய இந்த உபதேசத்தைத் தான் நாயகி ஸ்வாமிகள் மனதிற்கு அடிக்கடி தனது பாடல்களின் மூலம் புகட்டுகின்றார். அதற்கும் கூட மனம் சில நேரங்களில் இசைய மறுக்கின்றது. எனவே அவருக்குக் கூட மனதோடு பேசிப் பேசி பு$^2$ரோ பு$^2$ரோ (போதும், போதும்) ஆகிவிடுகின்றது. மேலும் கூறுவார்.

மொந்நு தூ கோட் ஜார்யேஸ்ரே
சொக்கட் கு$^3$ன்னுன் யேட் நஸிதைதி$^3$
மொந்நு தூ அங்கு$^3$ன் பு$^2$ன்னஹா
அங்கு$^3$ன்பு$^2$ன்னஹா ஜெலும்காய் கு$^3$ண்ணு
து$^3$ர்கு$^3$ண்ணு அரே – மொந்நு தூ கோட்

ஏ மனமே! நீ எங்கு செல்கின்றாய்? நற்குணங்களை நசித்து விட்டு செல்கின்றளையே இதுவரைக்கும் நீ அவ்வாறுசெய்தது போறாதா என்ன? பிறப்பு எடுத்ததில் என்ன நற்பயன் உண்டு. பிறப்பிறப்பினால் விளைவது வெறும் துன்பமே என்கிறார் மனதைப் பார்த்து பு$^2$ரோ பு$^2$ரோ (போதும் போதும்) என்றவுடன் மனம் வெகு வேகமாக ஓடிச் செல்கின்றது. அது தான்

கீதையில் பகவானே கூறி விட்டார் மனம் கட்டுப்படாதது என்று. நாயகி ஸ்வாமிகள் உபதேசங்கட்கு கட்டுப்பட மறுக்கின்றதே. ஓட முயல்கின்றது. ஓட முயலும் மனதை நோக்கி ஸ்வாமிகள் இவ்விதம் கூறுகின்றார்.

சரி போகட்டும். இவர் மனதை என்ன தான் செய்ய வேண்டும் என்கிறார்? சற்று தெளிவாக எளிமையாகத் தான் கூறட்டுமே. இதோ அதற்கும் இருக்கிறது அருமையான நாமாவளிப் பாடல்.

ஏதி$^{3}$ந்நு தொர தி$^{3}$ந்து
ஏ ப$^{2}$ல்லா தி$^{3}$ந்நு கோனக்கி மொந்நு
ஏ பி$^{4}$த்தரும் ஹரிக் க$^{3}$வ்லே
ஹரிக்ருப கரொய் தூ ஜிவ்லே
மோஸ் ஜானொகோ.

ஏ மனமே! மோசம் போகாதே. இத்தினம் உனது தினம் என்று என்னு. நாளைய தினம் எப்படியோ? நேரம் கிடைத்துள்ள இன்றே உள்ளத்தில் பகவானைப் பாடுக. ஹரி அருள்புரிவான் நீ பிழைப்பாய். அதாவது பேரின்பம் அளிக்கும் மோட்ச பதவியைப் பெறுவாய். மோசம் போகாதே என எச்சரிக்கின்றார்.

பின்வரும் நாமாவளிகளில் ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகள் சில உபதேசங்களை நமக்கு சொல்கின்றார். அவை என்னவென்பதைப் பார்ப்போம்.

சுந்தொ$^{3}$ லொஸன் முளொ ஹந்த$^{3}$னு ஸ் ஹோனா
ஹந்தொ$^{3}$ கஸ்தந்து$^{3}$ கோ$^{3}$விந்தா$^{3}$ க் ஆனந்த$^{3}$ம் ஹோய்
ஹிந்த$^{3}$ரெ:ய் ஸொட்$^{3}$டு$^{3}$ வோ மந்த$^{3}$ம் கொ$^{3}$ரு தூத்
நந்த$^{3}$ கோ$^{3}$ பாலுக் பொந்தை$^{3}$ கா$^{3}$ய் தூ$^{3}$த்
தெந்து$^{3}$ஸ் மெள்ளொ ஸங்கே$^{3}$ஸ்நா கஞ்ஜி
பொ$^{4}$ப்ளொ ஸெவ்காஜா:ட் ஹோனாமெநி

வெங்காயம், பூண்டு, முள்ளங்கி சமைக்கவே கூடாது என்கிறார் முதல் அடியில். காரணம் என்ன? இவை மூன்றும் ஆத்ம சாதகனுக்கு வேண்டாதவை. உண்ணலாகாது என்பர். அதாவது காம உணர்வினைத் தூண்டக் கூடிய ஆற்றல் இப்பொருட்களில் உள்ளன என்பதால் குடும்ப வாழ்க்கையை அனுபவித்து முடித்து இறை தியானத்தில் ஈடுபட்டவர்களும் பிரம்மச்சர்யம் கிருகதாஸ்ரமம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் என்ற நான்கு வாழ்க்கை நிலைகளில் கிருகதாஸ்ரமம் முடிந்து வானப்ரஸ்த நிலையில் உள்ளோரும், ஸந்யாஸ ஆஸ்ரமத்திலுள்ளோரும் கண்டிப்பாக பின்பற்ற

வேண்டியது. கிருகதாஸ்ரம நிலையிலுள்ளோரும் முடிந்தவரை இவைகளை குறைத்துக் கொள்ள வேண்டும். ஆத்ம பலம் பெற உதவும்.

2 வது அடியில் பச்சரிசி சமையுங்கள் கோவிந்தனான பகவானுக்கும், ஆனந்தத்தை அது ஏற்படுத்தும் என்கிறார். பூஜைக்குரியது பச்சரிசி தான். பச்சரிசியினால் செய்யும் பொங்கல் தான் பகவானுக்கு நைவேத்யம் செய்யப்படுகின்றது. புழுங்கலரிசி என்பது நெல்லாக இருக்கும் போது ஒரு முறை சமைத்து விடுகிறோம். புழுங்கலரிசி சாதம் சமைத்ததையே மீண்டும் சமைத்தது போல் ஆகின்றது. எனவே புழுங்கலரிசி பூஜைக்கு ஆகாது. பச்சரிசி தான் பகவானுக்கு மகிழ்வைத் தரும். எனவே பச்சரிசி சமையுங்கள் என்று நாயகி ஸ்வாமிகள் கூறுகின்றார்.

3 வது அடியில் எருமைப்பால் ( மந்தம் கொருதூத் ) இன்றே உபயோகிப்பதை விட்டு விடுவீர் என்கிறார். பெய்ஸ் தூத் என்று குறிப்பிடாமல் 'மந்தம் கொருதூத்' என்று குறிப்பிடுகின்றார். 'மந்தம்' என்ற சொல்லே அப்பாலின் தன்மையினை எடுத்துக் கூறுகின்றது. எருமைப்பால் மந்த குணத்தைத் தரும் இயல்புடையது. எனவே தவிர்க்க வேண்டும் என்கிறார் ஸ்வாமிகள். நாம் பசும்பால் கிடைக்கும் பொழுது அதை பயன்படுத்த வேண்டும்.

நந்தகோபாலனான கண்ணனுக்குப் பிரியமானது பசும்பால். கோபாலன் பசுக்களை பாதுகாத்தவன் ஸ்ரீகிருஷ்ணன். 'கோ'க்களை 'பாலி'த்த தால் ஸ்ரீகிருஷ்ணனுக்கு கோபாலன் என்ற பெயரே உண்டாயிற்று. அவனுக்கு பிரியமானது பசும்பாலே. கோபாலனான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் வாழ்க்கை தான் எவ்வளவு சுறுசுறுப்பானது. கர்மயோகியாக வாழ்ந்து காட்டியவன். உலகத்திற்கே குருவாக இருந்து, பகவத்கீதை என்னும் உபதேச நூல் வழங்கினார். அத்தகைய சிரேஷ்டருக்கே பிரியமானது பசும்பால் தான். நாமும் அதனையே பயன்படுத்துவோமாக. பசுக்களை காத்து ரக்ஷிப்போமாக!.

மேலும் ஸ்வாமிகள் கூறுவார். அன்று கூட சொன்னேனே நான்? என்ன சொன்னார் இவர்? அவரிடமே கேட்போம். கஞ்ஜி, சுரைக்காய், முருங்கை கூடாது என்கிறார் ஸ்வாமிகள். இம்மூன்றிலும் உள்ள வேண்டாத குணங்கள் என்ன? 'கஞ்ஜி' என்பது கலயத்தில் வைக்கப்படும் புளித்த நீர் பழங்கஞ்ஜியாகும். சமைத்த ஒன்றை சமைத்தலுக்குப் பயன்படுத்துவதாக உள்ளது. சுரைக்காயும், முருங்கையும் ஆத்மசாதகனுக்கு ஆகாதவை. எனவே அதை தவிர்த்திடல் வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் நடைமுறையில் பொதுவாக அனைவரும் உபயோகப்படுத்தும் பொருட்களை வேண்டாமென்று ஸ்வாமிகள் கூறுகின்றாரே என்று எண்ணுகிறீர்களா? ஆம் ஆத்மசாதகனுக்கு அவர் கூறும் உபதேசமே இவை. கிருகதாஸ்ரமம் முடிந்த வானப்ரஸ்த நிலையிலுள்ளோரும் ஸந்யாஸ ஆஸ்ரமத்தில் உள்ளோரும் கண்டிப்பாக பின்பற்ற வேண்டியவை இவை. இல்லறத்திலுள்ளோரும் இவ்வுபதேசங்களை பின்பற்றி நடந்தால் ஆத்ம பலம் பெற முடியும் எனவே நாயகி ஸ்வாமிகளின் இந்நல்லுபதேசத்தை பின்பற்றி நடக்க வேண்டும்.

ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகள் பாடியுள்ள நகைச்சுவை நாமாவளி ஒன்றை பார்ப்போம். 'நகைச்சுவை நாமாவளி' என்று ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் பாகவதோத்தமர்கள் இந்நாமாவளியை நகை உணர்வினை ஊட்டும் வகையில் பாடுவதை பார்த்திருக்கிறேன். ஆதலால் நகைச்சுவை நாமாவளி என்று குறிப்பிட்டேன். சரி முதலில் நாமாவளிப் பாடலைப் பார்ப்போம்.

கோ$^3$ தொ$^3$ ளாம்பனி க$^2$ள்ளன் தும்ர
க$^3$ திக்வாட் ஸெய்ல்வொமெனி மென்னான்
சொ$^3$ட்டா$^3$ சொட்டி$^3$ன் த்யேவேள்
கோட் காய் தொ$^2$ வ்ரி : யாஸ்மெனி புஸன்
கோட் க$^3$டி$^3$ தொ$_2$வ்ரி : யாஸ்மெனி அஸன்
ஸங்கொ$^3$ மெனி லெகுத்தொ பி$^3$ ஸன்
தொங்கி$^3$ தொங்கி$^3$ நஸன்
வொங்கி$^3$ வொங்கி$^3$ பனி பொஸன்
ஸங்கி$^3$ ஸங்கி$^3$ மெனி நெஸன்
காஸ் ஹன்னவ் க$^3$திமெல்லன் அம்மான்
களாநாஸ்தக்விதி$^3$ அவேஸ்மெனி ரொள்ளன்
மேடின் ஜியெவாட் ஜாமென்னான்
நடனகோ$^3$ பாலுக் பாய்ம் பொன்னான்.

இந்நாமாவளிப் பாடலை நாயகி ஸ்வாமிகள் யாரைக் குறித்துப் பாடியுள்ளார் என்பது பாடலைப் படித்தவுடன் எளிதில் அறிந்து கொள்ளலாம். ஸ்வாமிகள் தாய்மார்களைப் பற்றி, அவர் தம் இயற்கையான போக்கினைப் பற்றி குறிப்பிடுகின்றார். அதாவது மனைவிமார்கள் கணவன்மார்களிடம் தாங்கள் இயல்பாகவே நடந்து கொள்ளும் விதம் பற்றி விவரிக்கின்றார். அவை என்ன?

முதல் அடியில் ஸ்வாமிகள் அடிக்கடி கண்ணீர் விடுவார்கள் உங்கள் நற்கதிக்கு வழியைப் பாருங்கள் என்று கூறமாட்டார்கள் என்கிறார். கண்ணீர் விட்டு காரியத்தை சாதித்துக் கொள்பவர் காரிகைகள். மனைவிமார்கள் தங்கள் கணவன்மார்களிடம் காரியத்தை சாதித்துக் கொள்ள கண்ணீரை ஓர் ஆயுதமாக பயன்படுத்திக் கொள்வர். அதைத்தான் சுவாமிகள் குறிப்பிடுகின்றார். 2, 3, 4, 5, அடிகளில் சுவாமிகள் கூற வருவது என்ன? வீட்டில் பொருள் ஒன்று திருட்டுப் போய்விட்டது என வைத்துக் கொள்வோம். அப்பொழுது மனைவி ஒருவள் தன் கணவனிடம் நடந்து கொள்ளும் முறையினை இவ்வடிகளில் கூறுகின்றார். எப்படி? எங்கே என்ன பொருளை வைத்திருக்கிறீர்கள்? எங்கே புதைத்து வைத்திருக்கிறீர்கள் என்று கேட்பார்களாம். அதுவும் எப்படி? சொல்லுங்கள் என்று அருகில் அமர்ந்து வினவுவார்கள். சொல்லும் வரை தொந்தரவு செய்வார்கள். 'காஸ்ஹன்னவ் கதி மெல்லன் அம்மான்' — அதாவது பணம் காசேகதி என்று கூறுவார்களாம்.

மேலும் இறுதி அடியில் கூறுவார் மேடின் ஜியவாட் ஜா மென்னான் நடன கோபாலுக்கு பாய்ம் பொன்னான் சான்றோர் சென்ற வழியில் நடப்பீர் என்று கூறமாட்டார்கள். நடன கோபாலனை வணங்க மாட்டார்கள் என்றும் இந்நாமாவளியை முடிக்கின்றார்.

ஸ்வாமிகள் எப்படி இவ்வளவு கடுமையாக இந்த மனைவிமார்களைப் பற்றிக் கூறுகின்றார்? இவர் தான் நைஷ்டிக பிரம்மச்சாரியாயிற்றே. மனைவிமாரைப் பற்றி (தாய்மார்களைப் பற்றி) எப்படி இவரால் பாட முடிந்தது? மற்ற கிருகஸ்தர்கள் படும் அவதியினை அடிக்கடி பார்த்திருப்பார். எனவே பாடிவிட்டார் போலும்!.

இன்றைய நிலையில் இந்நாமாவளி பொருந்துமா என்பது அவரவர் குடும்பத்தைப் பொறுத்தது. அவரவர் சகதர்மினி நடந்து கொள்ளும் முறையினைப் பொறுத்தது. பொதுவாக இந்நாமாவளியினைப் பாடியதன் நோக்கத்தினை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனைவிமார்கள் பணமே பிரதானம் என்று தங்கள் கணவர்மார்களை நச்சரிக்காமல் பகவத் விஷயத்தில் தங்கள் கவனத்தை திருப்ப வேண்டும். கணவர்மார்களோடு தாங்களும் சேர்ந்து பகவத் பக்தியில் ஈடுபட வேண்டும். இதைத் தான் நாயகி ஸ்வாமிகள் நமக்கு உணர்த்துகின்றார். ஸ்வாமிகள் கூறியுள்ள அறிவுரையை அனுஷ்டிப்பீர்களாக.

கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து ஸ்ரீமந் நடன கோபாலநாயகி சுவாமிகள் பாடும் ஒரு நாமாவளிப் பாடலை பார்ப்போம்.

யேலா தேலா கோ$^3$ பாலா
ஜாலமு கர்நகொ கோ$^3$ பாலா
ஜிலபி தெ$^3$வுஸ் கோ$^3$ பாலா
பாலிமொகொ கோ$^3$ பாலா

குழந்தைகளைத் தொட்டிலிலிட்டு தாலாட்டி தூங்க வைக்கும் போது தாய்மார்கள் சொல்லும் 'ரே ரே' 'ஜோ' போன்ற ஒலிகளைப் போன்றது 'யேலா தேலா' என்ற ஒலிச் சொற்கள் கண்ணனை குழந்தையாக்கிய ஸ்வாமிகள் அக்குழந்தையிடம் குழந்தைக்குப் புரிய தக்கதாக எளிய மொழியில் நாமாவளிப் பாடலைப் பாடுகின்றார். இந்தாப்பா கண்ணா! ஜாலங்கள் –மாய வேலைகள் செய்யாதேப்பா! என்கிறார் ஜிலபிதெவுஸ் – – ஜிலேபி தருகிறேன் என்று கூறுகிறாரே பொதுவாக குழந்தைகட்கு இனிப்புப் பதார்த்தங்கள் என்றால் உயிராச்சே! எனவே இனிப்புப் பதார்த்தமான ஜிலேபியை உனக்குத் தருகிறேன் என்று கூறினார் போலும். ஆனால் ஸ்வாமிகள் குறிப்பிட்டு ஜிலேபியைச் சொன்னது ஏன்? சொல் அலங்காரத்திற்காக இருக்கலாம்.

இறுதியாக பாலி மொகொ கோபாலா என முடிக்கின்றார். பாலி என்றால் காப்பாற்று என்று அர்த்தம் கண்ணா! என்னைக் காப்பாற்றுவாயா என்று பிரார்த்திக்கின்றார்.

நாயகி ஸ்வாமிகள் பகவான் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடம் ஸதா பிரார்த்தனை செய்து கொண்டேயிருக்கிறார். பகவானோ எளிதில் மனமிரங்காமல் வேண்டுமென்றே சோதனை செய்கின்றார் கண்களில் நீர் பெருக பாடுகின்றார்.

கொங்கஸெய் மீ க$^3$ வரேஸ்தெரே க்ருஷ்ணா
அங்கு$^3$ன் தொகொ மொன் ஹுத்ரனிஹாரே க்ருஷ்ணா
கொங்கி$^3$டி$^3$ ஜான்தே$^3$னாரே தொகொ க்ருஷ்ணா
யெங்கு$^3$ ட் பி$^2$ரி ஸியெத் பு$^2$ரொரே க்ருஷ்ணா

ஹரே கிருஷ்ணா! நான் யாரைப் பார்த்து பாடுகிறேன் என்று நீ எண்ணி விட்டாய். உன்னைப் பார்த்துத்தானப்பா பாடிக் கொண்டிருக்கிறேன். இப்பொழுதாவது இதைத் தெரிந்து கொள். நான் உன்னைப் பார்த்துத் தான் பாடிக் கொண்டிருக்கிறேனென்று உனக்குத் தெரியாதா. இவ்விஷயம் உன்னைப் பார்த்துத் தான் நான் பாடிக்

கொண்டிருக்கிறேன் என்ற விஷயம் உனக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் உன் மனம் இன்னும் இரங்கவில்லையா என்ன?

பக்தர்கட்கு மனமிரங்கி அருள்புரிவது தானே உன் வேலை. அதை விட்டு கவனியாமலிருக்கின்றாயே ஓ! ஓ! நீ என்னைக் கவனிக்காமலிருந்தால் உன்னை விட்டு விடுவேன் என்றா எண்ணுகிறாய். உன்னை எங்கும் போகவிட மாட்டேன். எனக்கு நீ அருள்புரியும் வரை உன்னை நான் விடப் போவதில்லை. உன் பாதார விந்தங்களில் சரணடைகிறேன். உன்னை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நீ ஒன்றும் எனக்காக அதிகம் சிரமப்பட வேண்டாம். இங்கே திரும்பிப் பார்த்தால் போதுமப்பா, உன் அருட் பார்வையை அதுவும் கடைக்கண் பார்வையைச் செலுத்தினால் போதும் கண்ணா! செய்வாயா இதை?

நாயகி ஸ்வாமிகள் வேண்டுகோளுக்கு மாயக் கண்ணன் செவி சாய்த்தாரா? அதோ அங்கே பாருங்கள். நாயகி ஸ்வாமிகள் எவ்வளவு களிப்புடன் காணப்படுகின்றார். ஆனந்தக் கூத்தாடுகின்றாரே விஷயம் என்ன? கண்ணனைக் கண்டாரா! மாயவன் தன் அருட்பார்வையைச் செலுத்தினாரா? என்ன ஆச்சரியம். கண்ணனுக்கு இந்த நாயகி ஸ்வாமிகளின் அன்புத் தொல்லையை தாங்க முடியவில்லை. அவருக்கே கஷ்டமாக இருந்தது வேறு வழியின்றி அருள் புரிய வந்து விட்டார். கண்ணனின் கடைக்கண் பார்வைக்காக காத்திருந்த நாயகி ஸ்வாமிகள் கண்ணனை முழுவதுமாக தரிசனம் பெற்றால் அவரை விடுவாரா என்ன? கண்ணனை கெட்டியாக பிடித்துக் கொண்டார். உடனே கவி பிறக்கின்றது.

பொன்னாஜா:ட் தேஃவுகு மீ
ஸொண்ணா ஸொண்ணா ஐகோ
மொர்னாவ் நடனகோ³பால நாயகி
மொகொ ஜெலும் ஜுண்ணா ஜுண்ணா

புன்னை மரக் கண்ணனை நன்கு பற்றிக் கொண்டேன். விடவே மாட்டேன். கண்ணனைப் பற்றிக் கொண்ட எனக்கு இனி என்ன கவலை? பிறப்பிருந்தால் தானே கவலை. இனி ஒரு போதும் எனக்கு பிறப்பு கிடையாது. கண்ணனைப் பற்றிக் கொண்ட எனக்கு மோட்ச பதவி தான். நீங்களும் அவனைப் பற்றுங்கள். பேரின்பம் பெறுங்கள். பிறப்புத் துன்பத்தினின்று மீளுங்கள். மோட்சம் நிச்சயம் உங்கட்கு உண்டு.

கண்ணனை கண் குளிரக் கண்ட ஸௌராஷ்ட்ர மஹாகவியான ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள் மேலும் கூறுவதைக் கவனியுங்கள். நடன

கோபாலனை ஸதாசர்வ காலமும் பாடி நாயகியாக விளங்கிய ஸ்வாமிகள் அவர்தம் பெருமையை நமக்கு எடுத்துக் கூறுகின்றார். பாடலைப் பார்போம்.

ஸ்ரீ நடனகோ³ பால் நமம்
ப⁴க்தி ஹோரு க³வஸ் தெங்கோ ஃண்ஜானா
ஸ்ரீநடனகோ³ பால் தே³வுஸ் தே³வு
ஜீவுனுகு மோக்ஷி தே³ஸ்தக ஸ்ரீஹரி
நடன கோ³ பால் பொ³ வரெஸ் அவோ.

ஸ்ரீ நடன கோபால் என்ற திருப்பெயரை பக்தியுடன் உச்சரிப்பவர்கட்கு அது வீண் போகாது. மிகச் சிறந்த பலனைப் பெறுவர். நமக்கு மோட்சத்தை அளிக்கவல்லவர் அவனேயாவான். நடன கோபாலனான மஹா விஷ்ணுவே இறைவன். ஜீவர்களாகிய நமக்கு மோட்சத்தை அளிப்பதற்கு அவன் நம்மை அழைக்கின்றார். ஏ பக்த சிகாமணிகளே!. வாருங்கள் (அவோ) என மிகுந்த மரியாதையுடன் சுவாமிகள் நம்மை அழைக்கின்றார். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உயர் நெறிக்கிணங்க தாம் மோட்ச பிறவியைப் பெற்றது போல் நாமும் மோட்சத்தை பெற நமக்கு நல்வழியை எடுத்துக் கூறுகின்றார் சுவாமிகள்.

மேலும் ஸௌராஷ்ட்ர சைதன்யர் கூறுவார்.

ஸ்ரீராம ஸ்ரீகிருஷ்ணா ஸ்ரீகோ³விந்தா³ மெனோ
ஸ்ரீ கோ³ பாலா மெனோ
ஸேஸ்தெ பாபுன் நீ:ஸ்த ஹொய்ஜாய்
ஸெணம் யே தா⁴னுக் மெனோ
யே –– ஸரீரநித்யம் மெனி ஜனோ.

ராமா, கிருஷ்ணா, கோவிந்தா, கோபாலா என்ற பகவானின் திருப்பெயர்களை நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் நாவால் உச்சரியுங்கள். செய்துள்ள பாவங்களெல்லாம் இல்லாமல் போய்விடும். தூய்மை பெறுவீர்கள். இனி எப்பொழுதும் பாவங்களைச் செய்யாதீர்கள். உடம்பினை நிலையற்ற பொருள் என உணர்வீர்கள். ஆத்மா உயர்நிலை பெற பகவானைத் துதிப்பீர் என்கிறார் நாயகி சுவாமிகள்.

தமிழ் நாமாவளிகள் சிலவற்றைப் பார்ப்போம்.

ஆழ்வாரெம் பெருமானார்
ஜீயர் திருவடிகளே சரணம்

நம்மாழ்வாரெம் பெருமானார் ஜீயர்
திருவடிகளே சரணம்,
ஹரி நாராயண கோவிந்த கோபாலா
நம்பி னேனுன் பாதம்

கோவிந்தநாம ஸங்கீர்த்தனம்
நவிலா திருப்பதே பேய்த்தனம்
நடனகோபால நாம ஸங்கீர்த்தனம்
கேட்காமலிருப்பதே பேய்த்தனம்.

எம்பெருமானார் ஸ்ரீ ராமானுஜர், ஜீயர், நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களின் திருவடி சரணம் என்று இந்நாமாவளியில் கூறுவதிலிருந்து இவரது ஆசார்ய பக்தியினை நாம் அறியலாம்.

கோவிந்த நாம ஸங்கீர்த்தனம் நவிலாதிருப்பதும் நடன கோபால நாமத்தை கேட்காமலிருப்பதும் பேய்த்தனம் என்கிறார். பகவான் நாமத்தைச் சொல்லாலும் கேட்காமலிருப்பவர்களைப் பேயர்கள் என்று குறிப்பிடுகின்றார்.

ஸௌராஷ்ட்ர ஆசார்யரான ஸ்ரீமந் நடனகோபாலநாயகி ஸ்வாமிகள் ஸதா ஸர்வ காலமும் கண்ணனையே நினைந்து கண்ணனோடு கலந்த மஹான் ஆனவர். கனவிலும் கண்ணனை மறவாத பேரருளாளர். கனவிலும் கண்ணனை விடாதீர் என்று நாமாவளி ஒன்றில் குறிப்பிடுகின்றார். அதைப் பார்ப்போம்.

ஸொப்நாம்தீ ஹரிக் ஸொட$^{3}$ன் ஹோய்கி
ஸொடி$^{3}$ ஜெய்யவி பி$^{2}$ர்ஜெலும் க$^{2}$ட$^{3}$ன் ஹோய்கி
அப்$^{3}$பு$^{3}$நா மெநிகு ஜெலும் ஹரி தீ$^{3}$ரேஸி
ஆட் அக்ஷர் தெ$^{4}$ல்லுவோ தே$^{3}$வவி பொ$^{3}$ல்ஜீரெஸி

கனவிலும் கண்ணனை விடலாமா? கூடாது. கனவிலும் கண்ணனை மறவாதீர்கள். படுக்கும்போது கண்ணனை நினைந்து உறங்குங்கள். அவன் கனவிலும் தோன்றுவான். கண்ணனை மறந்தால் மீண்டும் பிறப்பு எடுக்க வேண்டியிருக்கும். எனவே கண்ணனை மறவாதீர். அரிது அரிது மானிடராய் பிறந்தால் அரிது என்று ஔவைப் பாட்டி சொன்னது போல் அப்புநாமெநிகு ஜெலும் – மனித ஜென்மம் கிடைக்காது. மிகவும் அரிதானது. அது நமக்கு கிடைத்திருக்கின்றது. அளித்தவர் யார்? ஹரி தீ$^{3}$ ரேஸி –– ஹரி கொடுத்துள்ளார் கிடைத்தற்கு அரிதான மானிட ஜன்மம் நமக்கு கிடைத்திருக்கின்றது. பகவான் ஏன் இந்த ஜன்மம் அளித்தார்? நம்மை

கடைத்தேற விட இந்த ஜன்மத்தை நமக்கு பகவான் நல்கியுள்ளார். அத்தகைய ஜன்மத்தை நமக்களித்த இறைவனை நாம் மறக்கலாமா? அவனை வாழ்த்தி உய்வு பெற வேண்டாமா? அவனைப் பற்றிக் கொள்ளுங்கள் 'ஓம் நமோ நாராயணாய' எனும் அஷ்டாக்ஷர திருமந்திரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். பற்றினால் பற்றற்ற அவன் திருவடி உங்கட்கு கிட்டும் என்பது உறுதி. தேவவி பெ²ால்ஜிரேஸி. இறைவனே அவனை அழைத்துச் செய்துள்ளார். நாயகி ஸ்வாமிகள் மிகவும் அழுத்தமாகச் கூறுகின்றார். "பொல்ஜிரெஸி (அழைத்துச் சென்றுள்ளார்) என்று மிகவும் தெளிவாக பிரத்யட்சமாக கூறுகின்றார். தாம் அனுபவத்தில் கண்ட உண்மைகளைச் சொல்லியுள்ளார். எனவே ஓம் நமோ நாராயணாய என்ற திருமந்திரத்தை நேரம் கிடைக்கும் போதெல்லாம் உச்சரியுங்கள் பேரின்ப நிலை நீங்கள் பெறலாம்.

ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகளின் பாடல்களில் பக்திச் சுவை இருப்பதோடு அரிய கருத்துக்களும் அடங்கியுள்ளன. மேலும் எளிதில் மனதில் பதியும்படி எளிய ஸௌராஷ்ட்ர மொழியில் அமைந்துள்ளன. தொடர்ந்து ஒரு நாமாவளியைப் பார்ப்போம்.

லிம்பு³ பொள்ளொ ஸொக உஜெதிகாய் சுளொ
ஜெம்பு பொள்ளொ ஸொக ரி:யெதிகாய்ஜெநெ
அம்ப³ன் போட் து³வ்ந கரஸ்தகஸ்நா ஹொயாஸ்
ஹரி ப³ஜன கர்நாஸ்தெநு.

எலுமிச்சை பழம் (நிறம்) போன்று பிறப்பு எடுத்தால் என்ன? கருமை நிற நாவல்பழம் (நிறம்) போன்று பிறந்தாலென்ன, ஹரி பஜனை செய்யாதவர்கள் தங்களை ஈன்ற தாயாரின் வயிற்றுக்கு வேதனையை உண்டாக்குபவர்களாக அல்லவோ இருக்கின்றனர். இது பாடலின் பொருளாகும். ஒருவர் மிக அழகாக, எலுமிச்சை பழ நிறத்தில் இருந்தால் என்ன? அல்லது முழுக்கருமை நிறம் கொண்ட நாவல் பழ நிறத்தில் இருந்தாலும் தான் என்ன? இருவரும் மனித ஜன்மங்களே. எலுமிச்சை பழ நிறத்தில் பிறந்து விட்டால் உயர்ந்தவர்கள் ஆகமாட்டார். நாவல் பழ நிறத்தில் இருப்பதால் தாழ்ந்தவர் அல்ல. பின் எப்படி? ஹரி பஜனை செய்பவரே உயர்ந்தவர். ஹரி பஜனை ஏன் செய்ய வேண்டும்? நம் ஒவ்வொருவருக்கும் தாய் உள்ளது போல் நம் எல்லோருக்கும் தாயைப் போன்றவர் ஸ்ரீஹரி. எனவே தாயைப் போற்றுவது போல் ஹரியை நாம்

போற்ற வேண்டும். அவ்வாறு போற்றாமலிருப்பவர்கள் தாயாருக்கு வேதனையளிப்பவர்களுக்கு இணையாவர். அதாவது ஹரி பஜனை செய்யாமலிருப்பது நம்மை ஈன்று ஆளாக்கிவிட்ட தாயாருக்கு வேதனை அளிப்பது போலாகும். எனவே தாயாருக்கு சந்தோஷத்தை மக்கள் அளிப்பது போல பகவானை துதித்து அவனை சந்தோஷப்படுத்த வேண்டும்.

பெற்றோரைப் பேண வேண்டியதன் அவசியத்தையும் சுவாமிகள் இங்கு குறிப்பிடுகின்றார். இன்றைய நிலையில் சிலர் தங்களை வளர்த்து ஆளாக்கிய தாயை நல்ல நிலைக்கு வந்தவுடன், சுய சம்பாத்ய நிலைக்கு வந்தவுடன் போற்றாமல், ஆதரிக்காமல் விட்டுவிடுவதைப் பார்க்கமுடிகிறது. வயதான பெற்றோர்களை ஆதரிக்காது விடுவது மிகப் பெரும்பாவமான காரியமாகும். தாயின் வயிறு எரியும்படி அவர்தம் மக்கள் நடந்துகொண்டால் அவ்வாறு நடந்து கொள்பவர்கள் நிச்சயம் துன்பங்களை அனுபவிப்பர். துன்பக் கடலில் வீழ்ந்து தத்தளிப்பர். மனைவியின் பேச்சைக் கேட்டு தாயை தூற்றுபவர் கதி அதோ கதிதான். எனவே தாயைப் போற்றுவோம். தாய் போன்று நம்மைப் பரிபாலிக்கும் ஹரியான ஸ்ரீமந் நாராயணனைப் போற்றுவோம்.

சௌராஷ்டிர கவி சிரேஷ்டரான ஸ்ரீமந் நடன கோபால நாயகி சுவாமிகள் ஒருமுறை ஸ்ரீரங்கத்திற்குச் சென்றிருந்தார். ஸ்ரீரங்கனை துதித்துக் கொண்டிருந்தார். மனம் உருகி பிரார்த்தித்தார். அவன் அருளை வேண்டி நின்றார். காத்துக் கிடந்தார். ஆனால் ஸ்ரீரங்கநாதன் சுகமாக பாம்பணையில் படுத்துக்கொண்டிருந்தார். நாயகி ஸ்வாமிகள் ஸ்ரீரங்க நாதனிடத்தில் உரிமையோடு கோபம் கொண்டார். உடனே நாமாவளிப் பாடல் ஒன்று எழுகிறது.

ஸங்கி$^3$ரெ ஸங்கி$^3$ரெ ரெங்கா – மொகொ
அங்குநு ஜெலும் தெ$^3$வென் ஹட்வில்ரி: யெஸ்கிகாய் (ஸ)
அத்த தொர்நியாவ் அத்தமொர்நியாவ்
அத்த தொர் நியாவ் மொர் நியாவ் ரஜ
மன்னார் ஜொவள் ஸங்கி$^3$ஜெ சால்
அத்த தொர் நியாவ் மொர் நியாவ் ரஜ
மன்னார் ஜொவள் ஸங்கி$^3$ஜெ சால் சால்
அத்த தொர்நியாவ் அத்த மொர்நியாவ் ரஜ
மன்னார் ஜொவள் ஸங்கி$^3$ ஜெ சால் சால் சால்

அத்ததோர் நியாவ் மொர் நியாவ்ரஜ
மன்னார் ஸங்கை3 சால் சால் சால் ஹூட் ஹூட் ஹூட்
தெ3ருமுஸ் வாட் வாட் வாட்
கருமுநு காட் காட் காட்
மர்முநு போ2ட்3 போ2ட்3 போ2ட்3
மொரநுஜ்வாவ் ஹேட்3 ஹேட்3 ஹேட்3
பரமபத3ம் கோட் கோட் கோட்
பொ3ல்ஜெய் ஸோட்3 ஸோட்3 ஸோட்3
ஸங்கி3ரே ஸங்கி3ரே ரெங்கா
யெங்கு3ட் தெங்கு3ட் ரி;யெதூ
ஹிங்கி3ரெ ஹிங்கி3ரெ ரெங்கா3
வடஸேமென் மொகொ ஸங்கி3ரெ — ரெங்கா3
நடனகோ3பால் நாயகின் நாவ்
மொகொ ஸங்கி3ரெ ஸங்கி3ரெ ரெங்கா3

நாமாவளிப் பாடல்களில் நீண்ட பாடல் இது. முன் காலத்தில் குடிமக்கள் தங்களது குறைகளை அரசனிடம் சொல்வர். அரசன் குடிமக்களது குறைகளை கேட்டு அவர்கட்கு நீதி வழங்குவான். நாயகி ஸ்வாமிகட்கு ஒரு குறை. அதாவது வேண்டும் என்றே ஸ்ரீரங்கநாதன் தன்னை கவனியாது உறங்கிக் கொண்டிருக்கிறான் என்பது. எனவே ஸ்ரீரங்கநாதனை எழுந்து வா, அரசனாகிய ராஜமன்னார் சுவாமியிடம் முறையிடுவோம். நான் எனது நியாயத்தைக் கூறுகிறேன். நீ உன் நியாயத்தைக் கூறு. ராஜமன்னார் சுவாமி நீதி வழங்குவார். என்ன நான் சொல்வது கேட்கிறதல்லவா? சற்று அறிதுயிலிருந்து விழித்தெழு, வா, போவோம் ராஜமன்னாரிடம்.

தருமமே வழி, கருமங்களை அறுப்பாய், மர்மங்களை உடைப்பாய். பிறப்பிறப்பினை அகற்று. பரமபதம் எங்கே? எனக்களிப்பாய். பரமபதத்தில் என்னை அழைத்து அங்கு என்ன விடுவாய். சொல் ரங்கநாதா!.

எப்பக்கமும் நிறைந்திருப்பவனே! பரமபதத்தில் எனக்கு இடமுண்டு என்று நீ சொல்லேன். நடனகோபாலனான ஸ்ரீகிருஷ்ண பகவானின் அடியார்கள் திருப்பெயர்களை எனக்குரைப்பாய் எனக்கு இனியும் பிறப்பு அளிக்க இருக்கின்றயா நீ? போதுமப்பா, போதும் பரமபதம் அளிக்கவாராய்.

நாமும் ரங்கநாதனை பிரார்த்திப்போம். மோட்ச பதவியைப் பெறுவோம்.

ஸ்ரீ நாயகி ஸ்வாமிகளின் நாமாவளிப் பாடல்களைத் தொடர்ந்து பார்ப்போம்.

க$^{2}$நி பெநி ஸொடி$^{3}$ ஸுக$^{2}$ம் ஸாரே
க$^{2}$நி பெநிம் கை ஸுக$^{2}$ம் நீ:ரே
மெநிகு ஜெலுமுஸ் தூ ஸாரே
ஸநிகு பாத்ரொ தூ ஹோய்ரே

உண்பது, அருந்துவது இவையே சுகம் என்று எண்ணி அவற்றை திரும்பத் திரும்பச் செய்யாமல் அவற்றினின்று அகன்று நின்று சுகம் காண்பாய். உண்பது, குடிப்பது இவையே சுகம் என்று எண்ணாதே. அவற்றினினும் மேலான சுகம் தெய்வானுபவம் என்ற மேலான சுகம். உண்பதும், அருந்துவதும் உடம்பிற்காக. ஆனால் இறைவனோடு கலந்து நிற்கும் சுகம் மேலான நிலை நாம் அடைவதற்காக. அரிதாம் மானிடப்பிறப்பு அத்தகைய மானிடப் பிறப்பு நமக்கு வாய்த்திருக்கிறது. எனவே இந்த மனித ஜன்மத்திலேயே நீ சுகம் காண விழைவாய். சுகத்தைப் பார்ப்பாய் உணர்வாய். பகவானின் அருட்பார்வைக்கு நீ பாத்திரமாவாய்.

நாயகி ஸ்வாமிகள் ஒருமுறை திருநாங்கூர் என்ற ஊருக்குச் சென்றிருந்தபோது பாடிய தமிழ் நாமாவளிப் பாடல் இதோ, பண்டரிநாதனைப் பாடிய ஒரே நாமாவளி இதுவே.

பண்டரிபுர வாஸா ஆண்டவனே நேசா
தொண்டு செய்தேன் உன்னை இனி ஆண்டருள்வாய் என்னை
செங்கமல மலர்பாதா திருமங்கையர் பணி வேதா என்
அங்கமெல்லாம் உருகி திருநாங்கூரில் வந்தடைந்தேன்

பிறிதொரு தமிழ் நாமாவளி :

இ ரெண்டடி பாட்டு பாடினால்
குண்டடி படா தென்று
ஸ்ரீ விண்ணடியர் கூறினார் இதை
கண்டு கொள்பவர்கள்
சண்டனுக்காளாவதில்லை.
பிறவித் தொல்லை இல்லை அவர்தமக்கெல்லை
பரமபதம் தில்லை கோவிந்தநாமம்
சொல்ல எல்லாவினை
சொல்லாமல் ஓடிப் போமேகோ
வல்லபனாம் நடன கோபாலனே
அல்லால் இல்லை வேறு கதி இங்கே

அல்லும் பகலும் இதை சொல்வார்க்கிணை யார் இங்கே

ஸ்ரீ வைஷ்ணவத்தில் 'ரஹஸ்ய த்ரயம்' எனும் மூன்று மந்திரங்கள் முக்கியமானது. அவற்றில் 'த்வயம்' பின்வருவது

'ஸ்ரீமத் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய நம :

இது இரண்டு அடிகளைக் கொண்டதாகும். இந்த இரண்டடிப் பாடலைப் பாடுபவர்கட்கு குண்டடி படாதென்கிறார். இவர் குண்டடி என்று குறிப்பிடுவது எதனை? எமன் உயிரை பறித்துச் செல்ல பயன்படுத்தும் பாசக் கயிற்றைத் தான் குறிப்பிடுகிறார். எமபாசக் கயிற்றால் பாதிக்கப்படாமல் விஷ்ணு தூதர்கள் மூலம் நேரே வைகுந்தம் பெற இந்த 2 அடிப்பாடலைப் பாடுங்கள் என்கிறார். சண்ட என்ற ஸமஸ்க்ருத சொல்லிற்கு கொடியவன், அலரி, ராக்ஷஸன் என்ற பொருள் உள்ளது. நாயகி ஸ்வாமிகள் 'சண்டன்' அதாவது கொடிய ராக்ஷஸன் என்று யாரைக் குறிப்பிடுகின்றார்? அதே எமனைத் தான் குறிப்பிடுகின்றார்.' சண்டனுக்காளாகாது இருக்க வேண்டுமானால் ஈரடிப்பாடலைப் பாடுங்கள்.

மேலும் கூறுவார். தில்லை கோவிந்த நாமம் சொன்னால் எல்லா வினையும் ஓடிப்போகும். அவர்கட்கு பிறவித் தொல்லை இனி இல்லை. அவருக்கு பரமபதம் கிடைப்பது எளிது. தில்லை கோவிந்த நாமம் என்று குறிப்பிட்டு கூறியிருப்பதைக் கவனிக்குமிடத்து இந்நாமாவளியை நாயகி ஸ்வாமிகள் தில்லை சென்றிருந்த சமயம் கோவிந்தராஜன் திருச்சன்னதியில் பாடியிருப்பார் எனத் தெரிகிறது.

இறுதியில் கோபியர்களுக்கு மிகப் பிரியமான நடனகோபாலனே நமக்கு கதி. அவரைத் தவிர வேறு கதி இல்லை. அல்லும் பகலும் இதை சொல்வார்க்கிணை யார் இங்கே என முடிக்கின்றார். நாயகி நவின்ற நல்வழியில் இரண்டடிபாடலுடன் பின்வரும் மஹா மந்திரத்தை அன்றாடம் நாம் உச்சரித்து இக, பர நலன் பெறுவோமாக!

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே !
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே !!

நாயகி நாமாவளிகள் முடிவுரை :

நாயகி ஸ்வாமிகளின் இந்நாமாவளிகள் படிப்பதற்கு சுவையானவை. கேட்பதற்கு இனிமையானவை. ஸ்வாமிகளின் பாடல்களையும், நாமாவளிகளையும் ஒரு முறை அல்ல, பன்முறை படித்துணர வேண்டும். இதன் மூலம் ஆத்மீகக் கருத்துக்கள், அறிவுரைகள் நாம் அறிவதுடன் ஸௌராஷ்டிர மொழிச் சொற்கள் பலவற்றை நாம் அறியலாம். தூய ஸௌராஷ்டிர மொழியில் பேச, எழுத நமக்கு உறுதுணை புரியும். பல்கலைக் கழக மட்டத்தில் ஸ்வாமிகளின் வரலாறு, பாடல்கள், பற்றி ஆராய்ச்சிப் பணி மேற்கொண்டு, டாக்டர் பட்டங்கள் பெற்றிருப்பதன் மூலம் ஸ்வாமிகளின் பெருமையை உணரலாம்.

ஸௌராஷ்டிர பெருமக்கள் ஸ்வாமிகளின் பாடல்களைத் தாம் படிப்பதோடு பிறமொழி மக்களும் விரும்புமாறு எடுத்துரைக்க வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் சமூகப் பெருமை உயரும். ஸ்வாமிகளின் கிருதிகளைப் போற்றுவோம். அவர் தம் பெருமையை உணருவோம். உணர்த்துவோம்.

'வாழி நாயகி நன்னெறி'

பிற்சேர்க்கை

# ஆலய தரிசனம்

பாரதத்தின் வட பகுதியில் மகாராஷ்டிர மாநிலத்தில் சந்திரபாகா நதிக்கரையில் பண்டரிபுரத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீ பாண்டுரங்கனாக நின்ற கோலத்தில் பண்டரீநாதன் கோயிலில் பக்தர்களுக்கு அருள்புரிந்து வருவது நாம் அறிவோம்.

பாரதத்தின் தென் பகுதியில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீ பாண்டுரங்கன் வடிவில் தமிழகத்தில் அருள்புரிந்து வருவது சேலம் மாநகரத்தில் ஆகும்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை சௌராஷ்டிர பிராம்மண மஹா ஜனங்களுக்குச் சொந்தமான ஸ்ரீ ருக்மணி ஸமேத ஸ்ரீ பாண்டு ரங்கநாத ஸ்வாமி தேவஸ்தானத்திற்கு 10.1.1997ம் நாளில் பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமி மஹராஜ் அவர்களும், பண்டரிபுரம் (மஹாராஷ்டிரம்) ஸ்ரீ பாபா பண்டாமஹராஜ் அவர்களும் "தட்சிண பண்டரிபுர மஹாக்ஷேத்திரம்" என மங்கள ஸாஸனம் செய்து அருளாசி வழங்கினர்.

பண்டரிபுர வாஸா என் ஆண்டவனே நேஸா
தொண்டு செய்தேன் உன்னை இனி ஆண்டவருள்வாய் என்னை
ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகள்

ஸ்ரீ நாயகி ஸ்வாமிகள் அருளிச் செய்த இந்த நாமாவளியினைப் பாடி ஸ்ரீ பாண்டுரெங்கனை தரிசித்து இகபரநலன் பெறுவோம்.



## I. ஆசிரியர் எழுதிய இதர நூல்கள் பெரு நூல்கள்

1. நாயகி நவின்ற நல்லுரைகள் (ஸ்ரீ நாயகி சுவாமிகளின் உபதேசங்கள்) முதல் பதிப்பு 1984
2. மேற்படி நூல் இரண்டாம் பதிப்பு – 1997
3. ஸ்ரீமந் நடன கோபால நாயகி குருஸ்தோத்ரங்கள் (சமஸ்க்ருதம் – தமிழ்) 1987
4. ஸ்ரீமந் நடன கோபால நாயகி அஷ்டோத்தர ஸத நாமாவளிகள் (சம்ஸ்க்ருதம் – தமிழ்) 1993

### சிறு நூல்கள்

5. ஸ்ரீமத் வேங்கடரமன பாகவத குரு அஷ்டோத்தர ஸத நாமாவளிகள் – 1993, 1997
6. ஈரோடு ஸ்ரீ கஸ்தூரி ரங்கநாதர் திருக்கோயில் வரலாறு
7. தாராபுரம் ஸ்ரீ காடு ஹனுமந்தராயர் திருக்கோயில் வரலாறு
8. ஸ்ரீமத் வேங்கடரமணர் பாடியருளிய 'தியாகராஜாஷ்டகம்'

## II. ஆசிரியர் வெளியிடவுள்ள நூல்கள்

1. ஸ்ரீ நாயகி சுவாமிகள் வைபவம்
   ஸ்ரீ நாயகி சுவாமிகள் அருளிச் செய்த முக்கிய கீர்த்தனையும் விளக்கவுரையும் கொண்டது.
2. ஸ்ரீ நாயகி ஸ்வாமி தரிசனம்
   ஸ்ரீ நாயகி சுவாமிகள் சரித்திரம், ஸ்தோத்ரம், மஹத்துவம், பிருந்தாவனம், மந்திர் முதலிய விபரங்கள் அடங்கியது.
3. ஸ்ரீ ஸௌராஷ்ட்ர தரிசனம்
   ஸௌராஷ்ட்ர மொழி, எழுத்து, இலக்கியம், கலாச்சாரம், மகான்கள், சான்றோர்கள் பற்றி ஆசிரியர் பல்வேறு இதழ்களில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு.

## III. கல்வித் தகுதிகள்

B.A., (அரசியல்) – மதுரை பல்கலை
ஹிந்தியில் 'விஷாரத்'
ஸம்ஸ்க்ருதத்தில் 'கோவித'
வேதத்தில் 'உபநிஷத் அத்யயனம்'
அண்ணாமலை பல்கலையில் M A., (தமிழ்) படித்து வருகிறார்.


### ஆசிரியர் பெற்றுள்ள பட்டங்கள்

| | பட்டம் | | வழங்கிய அமைப்பு |
|---|---|---|---|
| 1. | தெய்வீக எழுத்துலகமணி | – | 'பூஜாமணி – ஸமூக ஆன்மீக மாத இதழ் |
| 2. | ஸித்த ஸேவா ரத்னம் | – | மதுரை ஸித்தாச்ரமம் |
| 3 | ஸ்ரீ நாயகி குருபாததூளி | – | 'பாஷாபிமானி' இதழில் புனைப் பெயராக பிரகடனம். 'ஸுரித்' இதழ் பட்டமாக வழங்கியது. |

### கல்விப் பணி

மதுரை வேதாத்யயன ஸபை மூலம் தாராபுரத்திலும் மதுரை ஸித்தாச்ரமம் மூலம் ஈரோட்டிலும் மாணவர்களுக்கு ஸம்ஸ்க்ருதம் கற்பித்துள்ளார். மேலும் மதுரை வேதாத்யயன ஸபை வேதபாடசாலையில் 'மாணவர்களுக்கு மந்திரங்கள்' மற்றும் 'தைத்திரீய உபநிஷத், 'அன்னசூக்தம்' வித்யார்த்திகளுக்கு பயிற்சி வகுப்பு நடத்தியுள்ளார்

## அனுபந்தம்



### ஸ்ரீ K.R.M. கிஷோர்குமார், IPS

ஸ்ரீமந் நடன கோபால நாயகி சுவாமிகளின் கீர்த்தனைகளை அனவரதமும் பாடிய 'அத்யயனம்' குட்டுவா, ஹ.ராமலிங்காச்சாரியாரின் பௌத்திரரான இவர், ஸ்ரீ K.R. மாதவாச்சாரி – ஸ்ரீமதி தமயந்தி தம்பதியரின் மூத்த புத்திரர் ஆவார். இந்திய ஜனாதிபதியாக விளங்கி தேசத்திற்கு பெருமை சேர்த்த டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த செப்டம்பர் 5ந் தேதி (1963) ல் பிறந்த இவர், சென்னை பல்கலையில் விவேகானந்தா கல்லூரி மூலம் B.Com., பட்டமும் பின் மதுரை பல்கலையில் M.B.A. ல் ரேங்க் மாணவராக தேர்ச்சி பெற்றார். ஊட்டி இந்துஸ்தான் போட்டோ தொழிற்சாலையில் உதவி மேலாளராக பணியாற்றிய சமயம் இந்திய சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி பெற்று 1989 I.P.S. ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். பயிற்சிக்கு பின் 1991 முதல் ஆந்திர மாநிலத்தில் பணியாற்றி வருகிறார்.

தற்சமயம் ஆந்திர மாநிலம் – பிரகாசம் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வரும் இவர். சமீபத்தில் ஐ.நா. சபை தூதுக்குழுவில் இந்தியா சார்பில் ஐரோப்பியா போஸ்னியாவில் ஓராண்டு காலம் பணியாற்றி விட்டு தாய்நாடு திரும்பியுள்ளார். இது இவரது விசேஷ திறமைக்குச் சான்று. வெளிநாட்டில் இருந்த அந்த சமயத்தில் இந்திய மாணவர்களின் நலனுக்காக இவர் எழுதிய கட்டுரை Need for sound career planning among students' அக்டோபர் 96 Competition Refresher ல் பிரசுரமானது குறிப்பிடத்தக்கது.

பொதுநல நிகழ்ச்சிகளில் ஆர்வமுடன் கலந்து கொள்ளும் இவர், தாய்மொழி சௌராஷ்டிரம் மட்டுமல்லாது தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், இந்தி, மொழிகளில் உரையாற்ற வல்லவர். ஸம்ஸ்க்ருத ஞானம் உடையவர்.

இளைஞர்கள் முன்னேற்றம், பெண்கள் முன்னற்றப்பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறார்.

இவரது இளைய சகோதரர்கள் ஸ்ரீமான்கள் K.R.M. பிரகாஷ்குமார் மற்றும் K.R.M. நிரஞ்சன்குமார் இருவரும் தனியார் துறையில் உத்வேக மிக்க பொறியாளர்களாக விளங்குகின்றனர்.

ஸ்ரீ கிஷோர்குமார் – ஸ்ரீமதி சாந்தி தம்பதியருக்கு இரண்டு குமாரர்கள் உள்ளனர். இவர் பல்லாண்டு வளமுடன் வாழ்ந்து பொது நலப்பணி பல புரிய வாழ்த்துகிறோம்.